தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 11
இதழ் 08
ரூ. 5/-
டிசம்பர் 2009

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத

நேர்காணல்
முனைவர்.
வசந்தா கந்தசாமி 6

சுய உதவிக் குழுக்கள் தொடர்
வெற்றியை நோக்கி ஒரு பயணம் 12

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தித் பொருட்களின்
கிருஸ்துமஸ் - புத்தாண்டு - பொங்கல்
விற்பனை கண்காட்சி 16

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

சுய உதவிக் குழுக்களுக்கு ஏற்ற

தேங்காய் நார் மற்றும் கயிறு உற்பத்தித் தொழில்

எச்.ஐ.வி இருந்தாலும்
எல்லோரையும் போல
எங்களாலும் சிறப்பாக
வேலை செய்ய முடியும்
எங்களுக்குத்
தேவை சம வாய்ப்பு
செந்தில் குமார்
எச்.ஐ.வி–யுடன் வாழ்பவர்
தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
தொலைபேசி : 044–2819 0891, 2819 0467

உள்ளே...

மணிமேகலை விருது பெற்ற நாமக்கல் இராமாபுரம் கூட்டமைப்பு » 6

நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த பெற்றோர் ஆசிரியர் கழகத்துடன் இணைந்து இக்கூட்டமைப்பு செயல்பட்டதுடன், ரூ. 5 ஆயிரத்தை நன்கொடையாக இப்பள்ளிக்கு வழங்கியுள்ளது.

முயற்சியே வெற்றிக்கு வழி » 10

குறைந்தமூலதனத்தில்துவக்கப்பட்டஇத்தொழில் இன்று மிகச் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. மூலப்பொருட்களை சலுகை விலையில் பெற்று, பல்வேறு வகையான சணல் பைகளை உற்பத்தி செய்து, குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

வெற்றியை நோக்கி ஒரு பயணம் » 12

18

உடலுக்கு பாதிப்பை தரும் **இரத்த சோகை**

22

சுய உதவிக் குழுக்களுக்கு ஏற்ற தேங்காய் நார் மற்றும் கயிறு உற்பத்தித் தொழில்

26

2010 புத்தாண்டே வருக...!

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 11 இதழ் 08 டிசம்பர் 2009

கௌரவ ஆசிரியர்
திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
திரு. ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்,

பொறுப்பாசிரியர்
திரு. வெ. இராமமூர்த்தி
மக்கள் தொடர்பு அலுவலர்,

நிதி நிர்வாகம்
திரு. எம். வி. சுப்ரமணியன்
நிதி ஆலோசகர்

ஆசிரியர் குழு
திரு. கோ. காந்தி காளிதாசன்
முதுநிலை மேலாளர் – கணினி

திருமதி. கா. காளத்தி
திட்ட ஒருங்கிணைப்பாளர், டி.என்.வி.ஆர்.சி.,

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்
திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்,

உதவி ஒருங்கிணைப்பாளர் – முற்றம்
திரு. ஏ. கண்ணன்

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
திரு. மு. செல்வம்

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை – 600 032.
தொலைபேசி: 044–2230 1801,
4202 7635
தொலைநகல்: 044–4202 7635,
044–2235 2751

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து

மனிதனாக இருப்பதற்கே உரிமை...

அன்புள்ள வாசகர்களுக்கு மனித உரிமை நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. உலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழவும், செயல்படவும் உரிமை உள்ளது. மனிதனின் அடிப்படை தேவைகளில் ஒன்றாக இந்த மனித உரிமை கருதப்பட்டு வருகிறது. எனவேதான் அரசியல் சாசனத்தில் கூட மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதனின் உரிமையை பறிப்பதற்கோ, ஒடுக்குவதற்கோ எவருக்குமே அதிகாரம் கிடையாது.

எனவேதான், மனித உரிமைக்கு களங்கம் விளைவிக்கும் எந்த ஒரு செயலும், மனித உரிமைக்கு எதிரான கருத்தும் மனித உரிமை மீறல் எனும் குற்றமாகக் கருதப்பட்டு வருகிறது. மனித உரிமை மீறல் என்பது மிகப்பெரிய குற்றமாகக் கருதப்படுவதால்தான் மனித உரிமையைக் கட்டிக் காப்பதற்கும், அதனை மீறுபவர்களை தண்டிப்பதற்கும் இன்று பல மனித உரிமை அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அகில உலக அமைப்பான ஐக்கிய நாட்டு சபை, அனைத்து நாடுகளின் அரசியல் சாசனங்கள் மற்றும் அடித்தளத்தில் பணிபுரிந்து வரும் தொண்டு நிறுவனங்கள் ஆகியவை மனித உரிமைகளுக்கு எதிராக இழைக்கப்படும் செயல்களை கண்டித்தும், விமர்சித்தும் அவ்வப்போது குரல் எழுப்புவதால்தான் இன்று உலகளவில் மனித உரிமை மீறல்கள் குறைந்து வருவது மனதிற்கு ஆறுதலாக உள்ளது.

ஒவ்வொரு மனிதனும் வாழ்வதற்கு வாழ்வாதார உரிமையும், அறிவு திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான கல்வி உரிமையும், சனநாயக அமைப்பில் பங்கேற்று தனது கருத்துக்களை கூறுவதற்கு அரசியல் உரிமையும், தனது பண்பாடுகளை பாதுகாத்துக் கொள்வதற்கான கலாச்சார உரிமையும் பெற்றுள்ளான். இந்த உரிமைகள் மறுக்கப்படும் போதும், தடுக்கப்படும் போதும்தான் சமூகச் சீரழிவுகள் ஏற்பட்டு சமுதாயத்தில் பிரச்சனையை உருவாக்குகிறது.

இன்றைய நவநாகரீக உலகத்தில் வாழும் மனிதர்களில் பலர் சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும், மொழியின் பெயராலும், இனத்தின் பெயராலும், ஆண் பெண் என்ற பாலின பாகுபாட்டின் பெயராலும் மனிதர்களின் உரிமையை ஒடுக்க முயற்சித்து வருவது மிகவும் வருந்தத்தக்கது, கண்டிக்கக் கூடியது. உலகில் பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற மனித உரிமைக்கு எதிரான செயல்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். இதற்கு அனைத்து மனிதர்களும் குரல் எழுப்ப வேண்டும். மீண்டும் மீண்டும் நாம் வலியுறுத்துவது என்னவென்றால், மனித உரிமையை நிலைநாட்டுவதற்கு இந்த சமுதாயம் எடுக்கும் முயற்சிகள் பல இருந்தும் கூட சாதிய அமைப்பில் மனிதர்களாக இருப்பதற்கே உரிமை கோரி வரும் ஒரு பகுதியினர் அழுகுரலை நிறுத்துவதற்கு இந்த நாகரீக சமுதாயம் பெரும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

முற்றம் வாசகர்களுக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

பாராட்டுகள்

அக்டோபர் 2009 முற்றம் இதழில் கல்பனா சாவ்லா விருது பெற்ற பேராசிரியை ந. இராஜமஹேஸ்வரி அவர்களின் பேட்டியை படித்தேன். வெளி நாட்டிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதி களில் இருந்தும் வரும் மருத்துவர்களுக்கு சென்னை கஸ்தூரிபா காந்தி மருத்துவமனையில் செயல்பட்டு வரும் மகளிர் சிறுநீரியில் துறையில் பயிற்சி தரப்படுகிற செய்தி எங்களை வியப்பில் ஆழ்த்தியது. தமிழக மருத்துவர்களும் இந்தியாவில் தலைநிமிர்ந்து சொல்லும் செய்தி ‘நாங்கள் மருத்துவத் துறையில் உலகிலேயே உயர்ந்து நிற்கிறோம்’ என்பதுதான். விருது பெற்ற பேராசிரியை அவர்களுக்கு பாராட்டுகள்.

பி. சேர்முகபாண்டியன்
மதுரை.

அறிந்து கொண்டேன்

முற்றம் இதழில் வெளியாகும் வரலாற்றில் மகளிர் தொடர் மிகவும் சிறப்பாக உள்ளது. இத்தொடரின் மூலம் அன்னை தெரசா அவர்களைப் பற்றி பல செய்திகளை அறிந்து கொண்டோம். வாழ்வில் வரும் சோதனைகளை எதிர்கொண்டு வறுமை யிலும் வெற்றி பெற முடியும் என்பதை கல்பனா சாவ்லா விருது பெற்ற வீராங்களை ஆர். ராஜலட்சுமி அவர்களின் நேர்காணல் மூலம் தெளிவாகத் தெரிந்து கொண்டோம். மகளிர் முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் செய்திகள் பலவற்றை தாங்கி வரும் முற்றத்திற்கு எங்கள் நன்றி.

திருமதி. பூமாரி மோகன்
ரோஜா மகளிர் குழு,
திருநெல்வேலி

www.tamilnaduwomen.org/murtram



சாதனைகள் படைக்க முடியும்

அக்டோபர் மாத முற்றம் இதழ் மிகவும் சிறப்பாக இருந்தது. நோபல் பரிசு பெற்ற பெண்கள் குறித்த செய்திகளும், தாய்மை அடைந்த பின்பும் டென்னிஸ் போட்டியில் கலந்த கொண்டு விருது பெற்ற கிம் க்லிஜ்ஸ்டெரர் மற்றும் இந்திய குத்துச் சண்டை வீராங்கனை மேரிகாம் ஆகியோர் குறித்த செய்திகள் தாய்மை அடைந்த பெண்களும் சாதனைகள் படைக்க முடியும் என்பதை உணர்த்துகிறது. நவராத்திரி விற்பனைக் கண்காட்சி கட்டுரையும், மகளிர் மருத்துவத்தில் சாதனை படைத்த மருத்துவர் ந. இராஜமஹேஸ்வரி அவர்களின் நேர்காணலும் சிறப்பாக இருந்தது.

செல்வி. கிருத்திகா ராமதாஸ்
வெண்புறா மகளிர் மன்றம்
ஹோசூர்

“மகளிர் முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் செய்திகள் பலவற்றை தாங்கி வரும் முற்றத்திற்கு எங்கள் நன்றி.”

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com wdcmutram@gmail.com

திருவண்ணாமலை மாவட்டம்

சாரல் மகளிர் சுய உதவிக் குழு

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், இருமந்தாங்கல் கிராமத்தில் சிறப்பாக செயல்பட்டு வருவது சாரல் மகளிர் சுய உதவிக் குழுவாகும். 2005ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இக்குழுவில் 20 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுவினைத் துவக்குவதற்கு முன்னர் இவர்கள் காகிதக் கூழில் பொம்மைகள் செய்து விற்பனை செய்து வந்தனர். இதன் மூலம் கிடைக்கும் மிகச் சொற்பமான வருவாயினைக் கொண்டு மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தனர்.

சாரல் மகளிர் சுய உதவிக் குழுவினைத் துவக்கிய காலகட்டத்தில், வங்கியில் ரூ. 2 ஆயிரம் கடன் பெற்றனர். பின்னர் ரூ. 50 ஆயிரம், ரூ. ஒரு இலட்சத்து 50 ஆயிரம், ரூ. மூன்று இலட்சம் என கடன் பெற்று, அத்தொகையினைக் கொண்டு மூலப்பொருட்கள் வாங்கி காகிதக் கூழ் பொம்மைகளை உருவாக்கி விற்பனை செய்து வருவதன் மூலம் பொருளாதார முன்னேற்றம் பெற்று மகிழ்ச்சிகரமாக வாழ்ந்து வருகின்றனர். வங்கியில் பெற்றக் கடனையும் காலம் தவறாமல் திரும்பச் செலுத்தி விட்டனர்.

> **ரூ. 50 ஆயிரம்,** ரூ. ஒரு இலட்சத்து 50 ஆயிரம், ரூ. மூன்று இலட்சம் என கடன் பெற்று, அத்தொகையினைக் கொண்டு மூலப்பொருட்கள் வாங்கி காகிதக் கூழ் பொம்மைகளை உருவாக்கி விற்பனை செய்து வருவதன் மூலம் பொருளாதார முன்னேற்றம் பெற்று மகிழ்ச்சிகரமாக வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் உற்பத்தி செய்யும் பொம்மைகள் மிகவும் தரமாகவும், அழகாகவும் இருப்பதால் வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. பல்வேறு இடங்களில் நடைபெறும் கண்காட்சிகளிலும் இக்குழுவினர் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

மேலும் தங்கள் பகுதியில நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வது, பள்ளிக் குழந்தைகளுக்குத் தேவையானப் பொருட்களை வழங்குவது, விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் உழைப்பினைப் பாராட்டி திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கைப்பேசி ஒன்றினை வழங்கியுள்ளனர். இக்குழுவினர் வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கும் சென்று தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். ■

மணிமேகலை விருது பெற்ற

நாமக்கல் இராமாபுரம் கூட்டமைப்பு

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் வட்டாரத்தில், இராமாபுரம் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு 15 சுய உதவிக் குழுக்களை தன்னகத்தே கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மறுசீரமைக்கப்பட்ட இக்கூட்டமைப்பில் இணைந்துள்ள 15 சுய உதவிக் குழுக்களும் வங்கிக் கடன் இணைப்பு பெற்றுள்ளன. அவைகளில் 11 குழுக்களின் உறுப்பினர்கள் வங்கியில் பொருளாதாரக் கடனுதவி பெற்று கறவை மாடுகள் வளர்த்தல் மற்றும் கீற்று முடைதல் தொழில் செய்து வருகின்றனர்.

இக்கூட்டமைப்பு செயல்படும் பகுதி விவசாயம் சார்ந்த பகுதியாக இருப்பதால் விவசாயம் சார்ந்த தொழில் தவிர வேறு எந்த தொழிலும் செய்ய இயலாது. எனவே இக்கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பின் மூலம் 30 பெண்கள் மகளிர் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மகளிர் திறன் பயிற்சி திட்டத்தில் இணைந்து தையல் பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது ஆயத்த ஆடைகள் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

புதிய குழுக்கள் அமைத்தல் மற்றும் நலிந்த குழுக்களை பலப்படுத்தி மீண்டும் செயல்படச் செய்தல் போன்றவற்றில் இக்கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றது. மேலும் இப்பகுதியில் செயல்பட்டு வந்த நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த பெற்றோர் ஆசிரியர் கழகத்துடன் இணைந்து இக்கூட்டமைப்பு செயல்பட்டதுடன், ரூ. 5 ஆயிரத்தை நன்கொடையாக இப்பள்ளிக்கு வழங்கியுள்ளது.

கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களில் வீடு இல்லாதவர்களுக்கு தொகுப்பு வீடுகள் பெற்றுக் கொடுத்து, அதற்கு வங்கிக் கடனாக ரூ. 20 ஆயிரம் வாங்கித் தரப்பட்டுள்ளது. இப்பகுதி யில் இயங்கி வரும் அங்கன்வாடி மையத்திற்கு பாய்கள், பாத்திரங்கள் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை கூட்டமைப்பின் சார்பில் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. ■

பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பின் மூலம் 30 பெண்கள் மகளிர் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மகளிர் திறன் பயிற்சி திட்டத்தில் இணைந்து தையல் பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது ஆயத்த ஆடைகள் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

தரம் உயர்த்த பெற்றோர் ஆசிரியர் கழகத்துடன் இணைந்து இக்கூட்டமைப்பு செயல்பட்டதுடன், ரூ. 5 ஆயிரத்தை நன்கொடையாக இப்பள்ளிக்கு வழங்கியுள்ளது.

சமூக நீதிப் போராளி

முனைவர். வசந்தா கந்தசாமி

பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்து, பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு மத்திய அரசின் கல்வி நிறுவனமான சென்னை ஐ.ஐ.டி.யில், கணிதத் துறையில் உதவிப் பேராசிரியையாகப் பணி புரிந்து வருபவர் முனைவர் வசந்தா கந்தசாமி. தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு உரிய இட ஒதுக்கீடு வழங்க வேண்டி போராடி வருபவர் இவர்.

இன்னல்களையும், தடைகளையும் எதிர்கொண்டு தனது சேவையில் இம்மியளவும் குறைவின்றி நிறைவு செய்து வரும் முனைவர் வசந்தா கந்தசாமி அவர்கள், இதுவரை 47 நூல்கள் மற்றும் ஏராளமான ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரிடம் பயின்ற மாணவர்கள் பல்வேறு நாடுகளில் உயர்ந்த பதவிகளை வகித்து வருகின்றனர். தனது நூல்களை இணைய தளங்களில் வெளியிட்டு, ஆய்வு மாணவர்கள் அதை இலவசமாக பதிவிறக்கம் (டவுன்லோடு) செய்து படிப்பதற்கு வழி செய்துள்ளார். எய்ட்ஸ் நோய் குறித்த மூன்று நூல்களையும் எழுதி உள்ளார்.

சமூக நீதிக்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் அயராது போராடி வரும் இவரை ‘பெண் உருவில் வந்த பெரியார்’ என்பர். இவருக்கு ஏற்பட்டுள்ள மனக்காயத்திற்கு இடப்பட்ட மருந்ஸ்ளஃதாக 2006ஆம் ஆண்டு தமிழக அரசு கல்பனா சாவ்லா விருது அளித்து சிறப்பித்துள்ளது. தனக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளையும், அவமானங்களையும் பொறுத்துக் கொண்டு, சமூக நீதிக்காகப் போராடி வரும் முனைவர் வசந்தா கந்தசாமி அவர்கள் முற்றம் இதழின்

வாயிலாக தனது கருத்துக்களை சுய உதவிக் குழுப் பெண்களுக்கு கூறுகிறார்.

தங்களின் சொந்த ஊர், பெற்றோர், படிப்பு, குடும்பம் குறித்து...

எனது பூர்வீகம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள உரத்தூர். எனது தந்தையார் காலஞ்சென்ற திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள், சென்னை தொண்டை மண்டல துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணி புரிந்தார். சில வருடங்கள் ஆப்பிரிக்காவில் உள்ள எத்தியோப்பியாவில் கல்வித் துறையிலும் பணி புரிந்துள்ளார். நான் பிறந்தது சென்னையில்தான். சென்னை வைஷ்ணவா கல்லூரியில் பி.யு.சி., ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்புகளை படித்தேன். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் படிப்பு படித்தேன். காட்பாடி அக்ஸிலியம் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம், எத்திராஜ் கல்லூரி ஆகியவைகளில் பேராசியையாகப் பணி புரிந்துள்ளேன்.

1988ஆம் ஆண்டு முதல் சென்னை ஐ.ஐ.டி.யில் கணிதத் துறையில் உதவிப் பேராசிரியையாகப் பணி புரிந்து வருகிறேன். எனது கணவர் திரு. கந்தசாமி அவர்களும் கல்வியாளர்தான். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். பல காரணங்களினால் அவர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க முடியாமல், அஞ்சல் வழிக் கல்வியில் படித்து பட்டம் பெற்றுள்ளனர்.

> **சுமார் 47 நூல்கள்** எழுதியுள்ளேன். அதில் 20 நூல்கள் அமெரிக்காவில் வெளியிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. நான் எழுதிய நூல்களை எல்லாம் எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டு பிடிப்போர், சத்ரபதி சாகுஜி மகராஜ், மகாத்மா ஜோதிராவ் புலே, அண்ணல் அம்பேத்கார், அய்யா பெரியார் மற்றும் டாக்டர் கலைஞர் ஆகியோருக்கு காணிக்கையாக்கியுள்ளேன்.

தாங்கள் இதுவரை எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் நூல்கள் குறித்து...

இதுவரை சுமார் 47 நூல்கள் எழுதியுள்ளேன். அதில் 20 நூல்கள் அமெரிக்காவில் வெளியிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. நான் எழுதிய நூல்களை எல்லாம் எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடிப்போர், சத்ரபதி சாகுஜி மகராஜ், மகாத்மா ஜோதிராவ் புலே, அண்ணல் அம்பேத்கார், அய்யா பெரியார் மற்றும் டாக்டர் கலைஞர் ஆகியோருக்கு காணிக்கையாக்கியுள்ளேன். இதுதவிர எனது ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை சுமார் 632 ஆகும்.

தங்களிடம் பயின்ற மாணவர்கள் குறித்து...

என்னிடம் பயின்ற மாணவர்களில் 13 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர், 72 முதுகலை மாணவர்களுக்கு ஆய்வு வழிகாட்டியாக இருந்து அவர்கள் பட்டம் பெற உதவியுள்ளேன். என்னிடம் பயின்ற மாணவர்கள் பல்வேறு நாடுகளில் பணி புரிந்து வருகின்றனர்.

எய்ட்ஸ் நோய் குறித்து தாங்கள் எழுதிய புத்தகங்கள் மற்றும் எய்ட்ஸல் பாதிக்கப்பட்டவர்களுக்கு தாங்கள் செய்து வரும் உதவிகள் குறித்து...

எய்ட்ஸ் நோய் குறித்து கணித நோக்கில் மூன்று புத்தகங்கள் எழுதியுள்ளேன். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் அந்த நூல்களை வெளியிட உதவி செய்தது. மேலும் ஏராளமான எய்ட்ஸ் நோயாளிகளுக்கு ஆலோசனைகளையும், பொருளாதார உதவியும் செய்து வருகிறேன்.

தந்தை பெரியாரைப் பற்றி தாங்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரை குறித்து...

தந்தைப் பெரியாரைப் பற்றி Fuzzy and Neutrosophic Analysis of Periyar's Views on Untouchability என்ற நூலை எழுதியுள்ளேன். அந்த நூலை www.vasantha.net என்ற எனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளேன். அதை இலவசமாக பதிவிறக்கம் (டவுன்லோடு) செய்து படிக்கலாம்.

அதுமட்டுமல்லாமல் நான் எழுதியுள்ள நூல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளையும் எனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளேன். இவைகள் அனைத்தையும் உலகம் முழுவதும் உள்ள ஆய்வாளர்களும், மாணவர்களும் இலவசமாகப் பதிவிறக்கம் (டவுன்லோடு) செய்து படிக்கலாம். அவைகளைப் படிப்பவர்கள் நாள்தோறும் மின்னஞ்சல் அனுப்பி பாராட்டுகின்றனர். இணையதளத்தின் மூலம் எனது நூல்களைப் படிப்பவர்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.



பின்தங்கிய மக்களின் சமூக நீதி மற்றும் உரிமைகள் காக்கவும், தங்களின் செயல்பாடுகள், பெற்ற வெற்றிகள், சந்தித்த இடர்பாடுகள்...

இன்று சமூகத்தில் பின்தங்கிய மக்களுக்குப் பல்வேறு வகையிலும் அநீதிகள் நிகழ்ந்து வருகின்றன. குறிப்பாக நான் பணிபுரியும் ஐ.ஐ.டி.யில் பின்தங்கிய பிரிவைச் சார்ந்தவர்களுக்கு ஏற்படும் அநீதிகளை சொல்லலாம். கல்விக் கண் கொடுக்கும் பேராசிரியர்கள், அலுவலர்கள் முதற்கொண்டு படிக்க வரும் மாணவர்கள் வரை பின்தங்கிய பிரிவினருக்கு உரிய சலுகைகள் கிடைப்பதில்லை. 18 துறைகள் இயங்கி வரும் சென்னை ஐ.ஐ.டி.யில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு துறைத் தலைமை கிடையாது. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவள் என்ற காரணத்திற்காக எனக்கு பதவி உயர்வு கூட வழங்கப்படவில்லை.

45 வயதிற்கு உட்பட்ட இளம் விஞ்ஞானிகளுக்கு வழங்கப்படும் இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பட்நாகர் விருது பெற அனைத்துத் தகுதிகளும் எனக்கு இருந்தன. எனினும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவள் என்ற ஒரே காரணத்திற்காக பட்நாகர் விருது எனக்கு வழங்கப்படவில்லை.

எனக்கு இன்னல்கள் பல ஏற்படினும் அவற்றைத் தாங்கிக் கொண்டு, இதுவரை 632க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை பல்வேறு நாடுகளின் இதழ்களிலும், கணித அரங்குகளிலும் அரங்கேற்றியுள்ளேன். என்னுடைய மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருந்து வருகிறேன். இஸ்ரோ ஆராய்ச்சித் திட்டத்தில் எனது ஆய்விற்காக மத்திய அரசு ரூ. 7.77 இலட்சம் ஒதுக்கியது. எய்ட்ஸ் ஆராய்ச்சித் திட்டத்திற்காக தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1997ல் விருதுநகரைச் சேர்ந்த கண்ணன் என்ற தலித் மாணவர் சென்னை ஐ.ஐ.டி.யில் படிக்க பல்வேறு தடைகள் ஏற்பட்டது. ஆனால் நான் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியின் விளைவாக அம்மாணவரால் ஐ.ஐ.டி.யில் சேர்ந்து படிக்க முடிந்தது. 2000ஆவது ஆண்டில் டெல்லியில் நடைபெற்ற இண்டியன் நேஷனல் சயின்ஸ் காங்கிரஸ் மாநாட்டில் அம்மாணவரின் ஆய்வுக் கட்டுரை முதல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது. இன்று அம்மாணவர் அயல்நாட்டில் உள்ள பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வருகிறார். இதுபோல் என்னுடைய மாணவர்கள் பலர் பல்வேறு நாடுகளில் பணியாற்றி வருகின்றனர் என்பது எனக்குக் கிடைத்த வெற்றியாகும்.

ஐ.ஐ.டி. மற்றும் மத்திய கல்வி நிலையங்கள் பலவற்றில் இன்று 27 விழுக்காடு இட ஒதுக்கீடு கிடைத்திட, பெண்ணுரிமைப் போராளியாக தங்களின் பங்களிப்பு...

மத்திய அரசு நிறுவனங்களான ஐ.ஐ.டி. போன்றவைகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை என்பது அனைவரும் அறிந்ததே. உயர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே அங்கு இடம் கிடைக்கும் என்ற நிலையினை எதிர்த்து பல்வேறு நிலைகளில் எனது எதிர்ப்பினை பதிவு செய்து வந்தேன்.

இதற்காக நான்பட்ட துன்பங்கள் ஏராளம். எனினும் பல்வேறு பிரமுகர்களின் ஆதரவுடனும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தீவிர முயற்சியின் விளைவாகவும் இன்று நாடு முழுவதும் உள்ள மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் செயல்படும் கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு கிடைத் துள்ளது.

ஒருகணிதமேதையாகவும்,வல்லுநராகவும் திகழும் தாங்கள் சமூக உரிமைக்காக குரல் கொடுக்கத் தோன்றியது எவ்வாறு...

எனது தந்தையார் காலஞ்சென்ற திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் நண்பராக இருந்தவர். தனது மகள்களுக்கு படிப்பு செல்வத்தை தந்ததோடு, அனைவருக்கும் சாதி மறுப்பு திருமணத்தை தந்தை பெரியார் வழியில் நடத்தி வைத்தவர் எனது தந்தையார். எனவே சமூக நீதிக்கான உரிமைப் போராட்டத்தில் ஈடுபட எனக்கு வாய்ப்பு கிடைத்தது. இன்று வரை அப்போராட்ட களத்தில் நான் அயராது ஈடுபட்டு வருவதற்கு எனது கணவர் திரு. கந்தசாமி அவர்கள் எனக்கு உறுதுணையாக இருக்கிறார்.

> **18 துறைகள் இயங்கி வரும் சென்னை ஐ.ஐ.டி.யில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு துறைத் தலைமை கிடையாது. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவள் என்ற காரணத்திற்காக எனக்கு பதவி உயர்வு கூட வழங்கப்படவில்லை.**

ஏறத்தாழ 18 ஆண்டுகளாக தங்களுக்கு பணி உயர்வு மறுக்கப்பட்டதையும் பொறுத்துக் கொண்டு பணி புரிந்து வருவது குறித்து...

1988 முதல் சென்னை ஐ.ஐ.டி.யில் உதவி பேராசிரியராகப் பணி புரிந்து வருகிறேன். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஐ.ஐ.டி.யில் உரிய சலுகைகள் வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுவதால் அதை எதிர்த்து நான் போராடி வருகிறேன்.

கல்பனா சாவ்லா விருது அளிக்கப்பட்டது தங்களின் பணிக்கு கிடைத்தப் பெருமை என்பதைவிட, தங்களுக்கு ஏற்பட்ட மனக்காயத்திற்கு கிடைத்த மாமருந்து என குறிப்பிடலாமா?

உலகப் புகழ் பெற்ற கல்வி நிறுவனங்களில் ஒன்றான சென்னை ஐ.ஐ.டி.யில் பணிபுரிபவர்களுக்கு ஏராளமான வசதிகள் கிடைக்கின்றன. எனினும் என்னைப் போன்றவர்கள் பாரபட்சத்துடன் அந்நிறுவனங்களில் நடத்தப்பட்டு வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். எனினும் எனது விடா முயற்சியினாலும், எனது கணவர், குழந்தைகள் மற்றும் பல்வேறு பிரமுகர்களின் ஆதரவினாலும் நான் எனக்கு ஏற்படும் இன்னல்களை எதிர்த்துப் போராடி வருகிறேன்.

குடியிருப்பு, தொலைபேசி போன்றவைகளில் கூட பாரபட்சம் காட்டிவரும் நிலையில், எனது ஆசிரியப் பணியில் சிறப்புற ஈடுபட்டு வருகிறேன். ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் போன்றவற்றையும் வெளியிட்டுள்ளேன். இந்நிலையில் 2006ஆம் ஆண்டு தமிழக அரசு எனக்கு கல்பனா சாவ்லா விருது அளித்தது. இதற்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஐ.ஐ.டி.யில் உரிய சலுகைகள் வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுவதால் அதை எதிர்த்து நான் போராடி வருகிறேன்.

தற்காலத்தில் பெண்களின் நிலை குறித்து தங்களின் கருத்து...

பெண்களுக்குப் படிப்பு முக்கியம், எவ்வளவு சிரமப்பட்டாலும் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும். படிப்பு மட்டுமே பெண்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் என்பது எனது கருத்து. எனினும் இன்றும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நடைபெற்று வருவது வருத்தத்திற்குரியது. இந்நிலை மாற வேண்டும். தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவற்றில் தங்களின் கவனத்தை செலுத்தி வரும் பெண்கள் அதிலிருந்து மீள வேண்டும்.

சுய உதவிக் குழுக்களின் மூலம் பெண்கள் அடைந்து வரும் முன்னேற்றம் குறித்து...

இன்று சுய உதவிக் குழுக்கள் பெண்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக உள்ளன. சுய உதவிக் குழு பெண்கள் தங்களின் பிள்ளைகளுக்கு கல்வி அறிவினை அளிப்பதில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். பொருளாதார ரீதியாக பெண்கள் சுய சார்பு பெற சுய உதவிக் குழு இயக்கம் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது என்பது கண்கூடு.

பெண்களின் முன்னேற்றத்திற்கு தாங்கள் கூற விரும்புவது...

தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றில் சிறு தொழில்கள் செய்வது குறித்தான பயிற்சிகளை பெண்களுக்கு அளிக்கலாம், கணிப்பொறி பயிற்சி, செடிகள் வளர்ப்பது போன்றவற்றில் ஈடுபட்டு வருவாய் ஈட்டலாம். இவைகளில் ஈடுபடுவதன் வாயிலாக பெண்கள் தங்களின் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளலாம்.

கல்வி வளர்ச்சிக்கு தாங்கள் செய்ய விரும்புவது...

சொந்தமாக கல்லூரி துவங்க வேண்டும். அதில் கணிதம் மற்றும் சமூகவியல் இரண்டையும் இணைத்து போதிக்க வேண்டும். எனவே அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறேன். இதற்காக பல்வேறு வழிகளிலும் உதவிகளையும் எதிர்நோக்கி உள்ளேன். ■

எனது ஆசிரியப் பணியில் சிறப்புற ஈடுபட்டு வருகிறேன். ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் போன்றவற்றையும் வெளியிட்டுள்ளேன். இந்நிலையில் 2006ஆம் ஆண்டு தமிழக அரசு எனக்கு கல்பனா சாவ்லா விருது அளித்தது. இதற்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.



தேனி

முயற்சியே வெற்றிக்கு வழி

தேனி மாவட்டம், சின்னமனூரில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது ஸ்ரீ சக்தி மகளிர் சுய உதவிக் குழு. இக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் மகளிர் திட்டம் மூலம் பல்வேறு பயிற்சிகள் பெற்றுள்ளனர். அதில் 8 உறுப்பினர்கள் சணல்பைகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பாரத ஸ்டேட் வங்கியில் பொருளாதாரக் கடன் பெற்று, ரூ. 8 ஆயிரம் முதலீட்டில் சணல் பைகள், மஞ்சள் பைகள் போன்றவைகளை தயாரிக்கின்றனர். இப்பகுதியில் உள்ள மகளிர் முன்னேற்ற சங்கம் மூன்று தையல் இயந்திரங்களை இந்தக் குழுவிற்கு வழங்கியுள்ளது.

குறைந்த மூலதனத்தில் துவக்கப்பட்ட இத்தொழில் இன்று மிகச் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. மூலப்பொருட்களை சலுகை விலையில் பெற்று, பல்வேறு வகையான சணல் பைகளை உற்பத்தி செய்து, குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றனர். இக்குழுவினர் உற்பத்தி செய்யும் சணல் பைகளுக்கு, கம்பம், சின்னமனூர், தேவாரம், உத்தமபாளையம் போன்ற பகுதிகளில் பெரம் வரவேற்பு உள்ளது. ▪

ரூ. 8 ஆயிரம் முதலீட்டில் சணல் பைகள், மஞ்சள் பைகள் போன்றவைகளை தயாரிக்கின்றனர். இப்பகுதியில் உள்ள மகளிர் முன்னேற்ற சங்கம் மூன்று தையல் இயந்திரங்களை இந்தக் குழுவிற்கு வழங்கியுள்ளது.

நீலகிரி

தானத்தில் சிறந்தது அன்னதானம்

நீலகிரி மாவட்டம், குன்னூரில் அன்னபூர்ணா, விஷ்ணு மற்றும் வைரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக் களின் உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு பொருளாதாரத்தில் முன்னேறி வருகின்றனர்.

கடந்த மாதம் நீலகிரி பகுதியில் பெய்த கனமழையின் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் பாதிக்கப்பட்டு, உடமைகளை இழந்து பல்வேறு பள்ளிக்கூடங்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டிருந்த சுமார் 300 பேர்களுக்கு மேற்படி குழுக்களின் சார்பில் இரவு உணவு வழங்கப்பட்டது.

மேலும் இக்குழுவினர் தங்கள் பகுதிகளில் பல சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பதை உணர்ந்து செயல்பட்ட அக்குழுக்களுக்கு நமது வாழ்த்துகள். ▪

“ **இக்குழுக்களின்** உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். ”

ஈரோடு

உலகமயமாக்கப்பட்ட இன்றைய உலகில் உற்பத்தி, வணிகம், சேவை மற்றும் பல்வேறு துறைகளில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. தகவல் தொடர்பு துறையில் மிகப் பெரிய புரட்சி ஏற்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளிலும் கணினி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், பணிகள் வேகமாகவும், துரிதம ாகவும் நடைபெற்று வருகிறது. இப்படிப்பட்ட மாற்றங்கள் நம்முடைய இந்திய தொழிற்சாலைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நமது தொழில் முனைவோர்களும் புதி ய தொழில் நுட்பங்களை அறிந்து சர்வதேச நிறுவனங்களுடன் போட்டி போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்கள் பெரும்பாலும் தொழில் துறைக்குத் தேவையான தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துவதில்லை.

எனவே தொழிற்சாலைகளில் ஏற்படும் தொழில் மாற்றங்களை கருத்தில் கொண்டு வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நவீன தொழிற்திறன் பயிற்சி அளித்து, அவர்களை இன்றைய உலகமயம ாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிய அனுப்பினால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். பொருளாதார நிலை உயரும்.

இதைக் கருத்தில் கொண்டு குறிப் பாக கிராமப்புற மாணவர்களின் மேம் பாட்டிற்காக DMW CNC Center என்ற நிறுவனம் Computer Numerical control Programing and Operation என்று உயர் தொழில்நுட்ப பயிற்சியை +2, ஐ.டி.ஐ., டிப்ளமோ படிப்பை முடித்துள்ள இளைஞர்களுக்கு அளித்து 100 விழுக்காடு வேலைவாய்ப்பும் பெற்றுத் தருகிறது.

இதுவரை சுமார் 2500 மாணவர்கள் பயிற்சி பெற்று கோவை, சென்னை, ஒசூர், பெங்களூர் போன்ற நரங்களில் பணியாற்றி வருகின்றனர்.

திருச்சி

சுழல் நிதி

திருச்சி மாவட்டம், நாவல்பட்டில் நடைபெற்ற விழாவில் 3006 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சுழல் நிதி மற்றும் கடனுதவிகளுக்கான காசோலைகளை வழங்கி சிறப்பித்தார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திருமதி டாக்டர் பூங்கோதை, மாண்புமிகு மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை இணை அமைச்சர் திரு. து. நெப்போலியன், எல்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சந்தோஷ்பாபு, இ.ஆ.ப., தகவல் தொழில் நுட்பவியல் துறை செயலாளர் திரு. பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தா. சவுண்டையா. இ.ஆ.ப., மற்றும் நாடாளுமன்ற. சட்டமன்ற உறுப்பினர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

நாகப்பட்டினம்

விற்பனைப் பொருட்காட்சி

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில் நடைபெற்ற குட முழுக்கு திருவிழாவின் போது மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கத்தோடு மகளிர் திட்டம் சார்பாக மாவட்ட திட்ட அலுவலர் திருமதி. எஸ். சூர்யகலா அவர்களின் மேற்பார்வையில் விற்பனைப் பொருட்காட்சி தொடங்கப்பட்டது. இந்தப் பொருட்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 30 விற்பனை அரங்குகள் அமைத்திருந்தனர். கோரையால் செய்யப்பட்ட பொருட்கள், மென் பொம்மைகள், அலங்கார நகைகள், பூக்கள், காகிதம் மற்றும் மண் பொம்மைகள், பொருட்கள் உட்பட ஏராளமான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. மதிவாணன் அவர்கள் பொருட்காட்சியை பார்வையிட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பாராட்டிப் பேசியும், ஆலோசனை வழங்கியும், கைவினைப் பொருட்களை வாங்கியும் சிறப்பித்தார். ■

கோரையால் செய்யப்பட்ட பொருட்கள், மென் பொம்மைகள், அலங்கார நகைகள், பூக்கள், காகிதம் மற்றும் மண் பொம்மைகள், பொருட்கள் உட்பட ஏராளமான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ப. சஞ்சீவ் குமார்

வெற்றியை நோக்கி

ஒரு பயணம்

சுய உதவிக் குழுக்கள் நிலைத்த தன்மை அடைவதற்கு ஆதாரமாக இருப்பது சேமிப்பு ஆகும். சிறுதுளி பெருவெள்ளம் என்பது பழமொழி. சிறுசேமிப்பு என்பது இன்றைய புதுமொழி. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சேமிப்பு, நூறுகளில் ஆரம்பித்து ஆயிரங்களாக வளர்ந்து பின்பு அதுவே இலட்சங்களாக மாறுகிறது.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் பெரும்பாலான சுய உதவிக் குழுக்கள், குழு ஆரம்பித்து, சில வருடங்களில் இலட்சமாக மாற துவங்கும் பொழுது கலைத்து விட்டு, மீண்டும் நூறுகளில் இருந்து துவங்குகின்றனர். அவ்வாறு கலைக்காமல், இலட்சங்களாக மாறியவுடன் பொறுமை காத்தால் அதுவே கோடிகளாக மாறுவதற்கு கூட வாய்ப்பு உண்டு.

ஒரு சுய உதவிக் குழு ஆரம்பித்தவுடன் சேமிக்கத் துவங்குகின்றனர். சேமிப்பிலிருந்து உள்கடன் வழங்க துவங்குகின்றனர். ஆறு மாதம் நிறைவடைந்த பிறகு தரம் பிரித்தலில் தேர்ச்சி பெற்ற பின்னர் வங்கிகளிடமிருந்து கடன் பெறுகின்றனர். இவ்வாறு பெறப்படும் கடனை ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் திருப்பிச் செலுத்தி விடுகின்றனர். அதன்பிறகு இரண்டாம் தரம் பிரித்தலில் கலந்து கொண்டு, தேர்ச்சி பெற்ற பிறகு சேமிப்பின் அடிப்படையில் 2 மடங்கு முதல் 4 மடங்கு வரை கடன் பெறுகின்றனர். சுய உதவிக் குழுக்கள் இவ்வாறு வங்கிக் கடன் பெறுவதும், திருப்பிச் செலுத்துவதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இதனுடன் சேமிப்பும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

> **சேமிப்பையே** உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கி அதற்கு வட்டி வசூலிக்கலாம். இவ்வாறு செய்யும் போது சேமிப்பு மிக விரைவாக வளர்ந்து சுய உதவிக் குழுக்கள் நிலைத்த தன்மை பெறுகிறது. வட்டியும் உறுப்பினர்களுக்கே சொந்தமாகிறது

சேமிப்பு ஒரு குறிப்பிட்ட அளவு (உதாரணமாக 5 இலட்சம்) வளர்ந்து விட்டால் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வங்கிக் கடன் பெறுவதை நிறுத்திவிட்டு சேமிப்பையே உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கி அதற்கு வட்டி வசூலிக்கலாம். இவ்வாறு செய்யும்போது சேமிப்பு மிக விரைவாக வளர்ந்து சுய உதவிக் குழுக்கள் நிலைத்த தன்மை பெறுகிறது. வட்டியும் உறுப்பினர்களுக்கே சொந்தமாகிறது. சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களுக்கு தொழில் கடன் தேவைப்படும்போது வங்கியிலிருந்து எளிதாக பெற்றுக் கொள்ளலாம்.

சுய உதவிக் குழுக்களின் எதிர்காலம்

சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு தமிழக அரசு பல்வேறு திட்டங்களின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்கு மானியம் வழங்கி வருகிறது. ஆனால், இன்றைய சூழலில் சில குழுக்கள் அரசு வழங்கும் மானியத்திற்காகவே துவங்கப்படுகிறது.

மானியம் தருவதில் ஏதேனும் ஏமாற்றம் ஏற்பட்டால், உடனே குழுவை கலைத்து விடுகின்றனர். மானியம் என்பது சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் ஒரு ஊக்கத் தொகையே. அதை சேமிப்புடன் சேர்த்து குழுவை பலப்படுத்த வேண்டும். சேமிப்பு, மானியம் இவற்றில் எது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மகாபாரத கதையில் ஒரு நிகழ்வின் மூலம் நாம் தெளிவாக உணரலாம்.

மகாபாரதத்தில் போர் உறுதியான சூழ்நிலையில் அர்ச்சுனனும், துரியோதனனும் பகவான் கிருஷ்ணரின் உதவியை நாடிச் சென்றனர். அப்போது கிருஷ்ணர் உறங்கிக் கொண்டிருந்தார். துரியோதனன் கிருஷ்ணரின் தலையருகே உட்கார்ந்து கொள்கின்றான். அர்ச்சுனன் கிருஷ்ணரின் பாதத்தின் அருகே அமர்ந்துக் கொள்கிறான். கிருஷ்ணர் கண் விழித்தவுடன் முதலில் அர்ச்சுனனை பார்க்கிறார். பிறகு துரியோதனனைப் பார்க்கிறார். அதனால் உதவி கேட்கும் வாய்ப்பு முதலில் அர்ச்சுனனுக்கு தரப்படுகிறது. துரியோதனன் மனதிற்குள் எப்படியாவது கிருஷ்ணரின் படைகளை முழுவதும் பெற வேண்டும் என்று எண்ணுகிறான். அர்ச்சுனன் கிருஷ்ணரிடம் 'கிருஷ்ணா உன் படைகள் எதுவும் எனக்கு தேவையில்லை, நீ மட்டும் என் அருகில் இருந்தால் போதும்' என்கிறான். கிருஷ்ணர் என் படைகள் வேண்டாமா? என்று கேட்கிறார். அர்ச்சுனன் 'உன் படைகள் எதுவும் வேண்டாம், கிருஷ்ணா எனக்கு நீ மட்டும்தான் வேண்டும்' என்கிறான்.

இதைக் கண்டு துரியோதனன் மிக்க மகிழ்ச்சி அடைகிறான். உடனே கிருஷ்ணன் சிரித்துக் கொண்டே, 'துரியோதனா உனக்கு என்ன வேண்டும்?' என்ற கேட்கிறார். துரியோதனன் உடனே 'கிருஷ்ணா எனக்கு உன் படைகள் அனைத்தும் வேண்டும்' என்றான். உடனே கிருஷ்ணர் 'சரி எடுத்துக் கொள்' என்றார். துரியோதனன் கிருஷ்ணருக்கு நன்றி கூறிவிட்டு மிக்க மகிழ்ச்சியுடன் அரண்மனைக்கு சென்று சகுனியிடம் கூறுகிறான்.

சகுனி மிகவும் கோபித்துக் கொண்டு 'ஐயோ ஏமாந்து போய் விட்டாயே, கிருஷ்ணரின் படைகளுக்கு பதில் கிருஷ்ணரையல்லவா நீ கேட்டிருக்க வேண்டும்' என்று கூறி மிகவும் கோபம் கொள்கின்றான். பிறகு பாரதப் போர் நடைபெறுகிறது. போரின் துவக்கத்தில் அர்ச்சுனன் தன் உறவினர்களோடும், குருவோடும் போரிடத் தயங்குகிறான். கிருஷ்ணர் பகவத் கீதையை உபதேசிக்கிறார். அர்ச்சுனன் உற்சாகத்துடன் போர் புரிந்து இறுதியில் வெற்றி பெறுகிறான்.

இதில் சேமிப்பு என்பது கிருஷ்ணர், மானியம் என்பது கிருஷ்ணனின் படைகள். இக்கதை சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு உணர்த்துவது,

மானியம் என்பது சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் ஒரு ஊக்கத் தொகையே. அதை சேமிப்புடன் சேர்த்து குழுவை பலப்படுத்த வேண்டும்.

மானியத்தை மட்டுமே நம்பிக் கொண்டிருந்தால் வெற்றி பெற முடியாது. நன்றாக சேமிக்க வேண்டும், சேமிப்பால் மட்டுமே ஒரு குழுவால் வெற்றி பெற முடியும். சேமிப்பு செய்யாமல் மானியங்களை மட்டும் ஒரு குழு நம்பி இருப்பது, ஒரு அரசன் தன்மேல் நம்பிக்கை இல்லாமல், தன் படைகளை மட்டும் நம்பி போருக்கு செல்வது போல் ஆகும்.

சேமிப்பை அதிகப்படுத்தும் வழிகள்

தேவையற்ற பொருட்களை வாங்கும் போது நம்மிடம் உள்ள தேவையான பொருட்கள் பறி போய்விடும் என்று ஒரு பழமொழி உண்டு. எனவே தேவையற்ற செலவுகளை தவிர்ப்பதன் மூலம் சேமிப்பை அதிகப்படுத்தலாம்.

வருமானம் – (மொத்த செலவுகள் – தேவையற்ற செலவுகள்) = சேமிப்பு

ஏதாவது ஒரு தொழிலை செய்து வருமானத்தை ஈட்டி சேமிக்கலாம்.

ஒவ்வொரு மாதத்திற்கும் வரவு – செலவுகளை முறையாகத் திட்டமிட்டால் நன்றாக சேமிக்க முடியும்

நமது அன்றாட வாழ்வில் ஆடம்பரத்தை குறைத்தால் சேமிக்கலாம்.

தினந்தோறும் நடைபயிற்சி, யோகா முதலியவை செய்தால் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதோடு, நமது மருத்துவ செலவுகளும் குறையும். அதன் மூலம் சேமிக்கலாம்.

கடன் வாங்கி முதலீடு செய்வதை தவிர்க்க வேண்டும்.

தன் நிலையை அறியாமல் கடன் வாங்கி வட்டி கட்டுவதை தவிர்த்தால் சேமிக்கலாம்

நேர்மையாகவும், நியாயமாகவும் நடந்தால் நம்மால் சேமிக்க முடியும்

நமது சேமிப்பை பாதுகாப்பான முதலீடு திட்டங்களில் செலுத்தினால் சேமிப்பை அதிகப்படுத்தலாம்.

நமது கால விரயத்தை தவிர்த்து தொழிலில் ஈடுபட்டால் சேமிக்கலாம் ■

(தொடரும்)

புதுக்கோட்டை

வாழ்க வளர்க

சாமந்திப்பூ மகளிர் சுய உதவிக் குழு – புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார் ஒன்றியத்தில் செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வரும் பல்வேறு பயிற்சிகளைப் பெற்று தங்கள் திறனை மேம்படுத்தி வருகின்றனர். தங்கள் பகுதியில் செயல்படும் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பில் இணைந்து செயலாற்றி வருகின்றனர். இக்குழுவில் உறுப்பினராக உள்ள நாகம்மாள் என்பவரின் மகள் எட்டாது படித்து வந்தார். வறுமையின் காரணமாக மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியவில்லை. இந்நிலையில் குழு உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து 4000 ரூபாயை வட்டியில்லாத கடனாக நாகம்மாளிடம் வழங்கி அவரின் மகளை மேற்கொண்டு படிக்க வைக்க அறிவுறுத்தினர். தற்போது அந்த மாணவி 10ஆம் வகுப்பில் 500க்கு 442 மதிப்பெண்கள் பெற்று பள்ளியிலேயே முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்று. மேற்கொண்டு 11ஆம் வகுப்பில் உயிரியல் பிரிவில் சேர்ந்து படித்து வருகிறார். மேலும் அருகில் உள்ள வெள்ளாளபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 7 குழந்தைகள் மட்டுமே படித்து வந்ததால் அப்பள்ளியை மூடிவிடும் சூழ்நிலை உருவானது. உடன் இக்குழுவினைச் சேர்ந்தவர்கள் மற்ற பள்ளிகளில் படித்த தங்களது கிராமத்தைச் சேர்ந்த 35 குழந்தைகளை இந்தப் பள்ளியில் சேர்த்து தொடர்ந்து பள்ளி செயல்பட்டு வர வகை செய்தனர். ▪

வெள்ளாளப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் 7 குழந்தைகள் மட்டுமே படித்து வந்ததால் அப்பள்ளியை மூடிவிடும் சூழ்நிலை உருவானது. உடன் இக்குழுவைச் சேர்ந்தவர்கள் மற்ற பள்ளிகளில் படித்த தங்களது கிராமத்தைச் சேர்ந்த 35 குழந்தைகளை இந்தப் பள்ளியில் சேர்த்து உள்ளனர்.

சென்னை

விழிப்புணர்வு பிரச்சாரம்

சென்னை மாவட்டம், வியாசர்பாடி பகுதியில் அன்புத் தோழி மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இக்குழுவின் உறுப்பினர்கள் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றப் பணிகளுடன் தங்களால் இயன்றமக்கள்நலப்பணிகளையும்செய்துவருகின்றனர். உடல் உறுப்புகள் தானம் செய்வது குறித்து மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்ததை தொடர்ந்து, இக்குழுவில் உள்ள 14 உறுப்பினர்களும் உடல் உறுப்பு தானம் செய்திட முடிவெடுத்து, மோட் உடல் உறுப்பு தான அமைப்பின் படிவத்தில் கையெழுத்திட்டு அனுப்பி உள்ளனர். இக்குழுவின் சார்பில் வெளியிடப்பட்டதுண்டு பிரசுரங்களை வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்டு விழிப்புணர்வு பிரச்சாரத்தை துவக்கி வைத்தார்கள். ▪

இக்குழுவில் உள்ள 14 உறுப்பினர்களும் உடல் உறுப்பு தானம் செய்திட முடிவெடுத்து, மோட் உடல் உறுப்பு தான அமைப்பின் படிவத்தில் கையெழுத்திட்டு அனுப்பி உள்ளனர்.

மதுரை

சூரியபிரகாஷ்,
ஆனையூர், மதுரை.

பயிற்சியும் பணியும்

மதுரை மாவட்டம், ஆனையூர் பகுதியில் வசித்து வருபவர் சூரியபிரகாஷ் (வயது 18), 10ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். வறுமையின் காரணமாக மேலே படிக்க முடியவில்லை. எனவே இவர் தினக்கூலி வேலைக்கு செல்ல ஆரம்பித்தார். அதன்பின் ஹோட்டல்களில் பணி புரிந்தார். இவரின் பெற்றோர்களும் கூலி வேலை செய்து வந்தனர். இவருக்கு ஒரு அண்ணன் மற்றும் ஒரு தங்கை உள்ளனர்.

கூலி வேலையில் போதிய வருமானம் இன்றி இவரின் குடும்பம் மிகவும் சிரமப்பட்டு வந்தது. எனவே வேறு வேலையைத் தேடி அலைந்தார். 10ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்து இருந்ததால் இவருக்கு சரியான வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. மேலும் ஏதேனும் தொழில் பற்றிய அறிவு இருந்தால்தான் நல்ல வேலைக்கு செல்ல முடியும் என்று நினைத்தார். அதற்கு ஏற்ப பாலிடெக்னிக்கிலோ அல்லது ஐ.டி.ஐ.யிலோ சேர்ந்த படிக்க வசதியில்லை.

இச்சூழ்நிலையில் மதுரை மகளிர் திட்டத்தின் மூலம், இளைஞர் திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் டி.வி.எஸ். நிறுவனத்தில் வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளிக்கப்படுவதாக பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டிருந்ததை அறிந்து அதற்கு விண்ணப்பித்து, பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 6 மாதங்கள் பயிற்சி பெற்றார். அதன் பின்னர் டி.வி.எஸ். சமுதாயக் கல்லூரியின் மூலம் மதுரையில் இயங்கி வரும் விஸ்வாஸ் ஹவுசிங் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். ஆரம்ப ஊதியமாக மாதம் ரூ. 7000/– பெற்று வருகிறார். தனது வாழ்வில் வறுமை இருள் நீக்கி வளமை ஒளி பெருகுவதற்கு காரணமாக இருந்த மகளிர் திட்டத்திற்கும், மதுரை டி.வி.எஸ். நிறுவனத் திற்கும் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார் சூரியபிரகாஷ். ■

“ஒரு வருடத்தில் இவரின் ஊதியம் ரூ. 10 ஆயிரமாக உயரும். இன்று இவரின் குடும்பம் வறுமை நீங்கி, பொருளாதார நிலையில் முன்னேறி வருகிறது.”

தருமபுரி

சுழல் நிதி வழங்கும் விழா

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஒன்றியத்தில் உள்ள பருவதனஅள்ளி கிராமத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரம் திறப்பு விழா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கும் விழா கடந்த 08.11.2009 அன்று நடைபெற்றது. மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, 1300 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் மானியத்துடன் கூடிய பொருளாதாரக் கடனாக ரூ. 7 கோடியே 80 இலட்சம் வழங்கி, திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிய கட்டிடங்களை திறந்து வைத்து விழாப் பேருரை ஆற்றினார்.

விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. என். சுவாமிநாதன் (திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை), திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார் (மாவட்ட வருவாய் அலுவலர்), திருமதி. எஸ். ஜனகவல்லி (திட்ட அலுவலர், மகளிர் திட்டம்), வங்கியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், இதர அரசு அலுவலர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிய கட்டிடங்களை திறந்து வைத்து விழாப் பேருரை ஆற்றினார்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின்
2010
கிருஸ்துமஸ்
புத்தாண்டு
பொங்கல்
விற்பனைக் கண்காட்சி

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின்

கிருஸ்துமஸ் - புத்தாண்டு - பொங்கல் விற்பனை கண்காட்சி

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி மாநில அளவில் ஆண்டுதோறும் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் தொழிற்திறனை மேம்படுத்திடும் வகையில் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் வகைகள் மற்றும் அவர்தம் ஆற்றலை வெளியுலகிற்கு உணர்த்திடவும், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை எளிதாக சந்தைப்படுத்தி, நல்ல விலைக்கு விற்பனை செய்திட ஒரு வாய்ப்பளிக்கவும் இந்த விற்பனைக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு 2009–10ஆம் ஆண்டிற்கு பொருட்காட்சி கால அட்டவணை மாவட்ட அளவில் தயார் செய்யப்பட்டு, அதன்படி மாவட்ட அளவில் 60 விற்பனைக் கண்காட்சிகளும், வட்டார அளவில் 130 கண்காட்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆண்டு (2009–10) 15.12.2009 வரை 34 மாவட்ட அளவிலான விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பெற்று அவற்றில் 1234 சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று ரூ. 5.78 கோடிக்கு தங்களின் பொருட்களை விற்பனை செய்து பயன் பெற்றுள்ளன. இதனைப் போன்று அனைத்து மாவட்டங்களிலும் 80 வட்டார அளவிலான விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பெற்று அதில் 1322 சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று ரூ. 2.85 கோடிக்கு தங்களின் பொருட்களை விற்பனை செய்து பயன் பெற்றுள்ளன.

> தமிழகத்தில் தற்போது உள்ள 4 இலட்சத்து 12 ஆயிரத்து 104 குழுக்களில் 65 இலட்சத்து 72 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 96,668 மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது கிருஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சி 2009–10, சென்னை அண்ணாநகரில் உள்ள தந்தை பெரியார் சமுதாயக்

1322 சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று ரூ. 2.85 கோடிக்கு தங்களின் பொருட்களை விற்பனை செய்து பயன் பெற்றுள்ளன.

கூடத்தில் 19.12.2009 முதல் 01.01.2010 வரையிலும் மற்றும் சென்னை, மயிலாப்பூர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் 19.12.2009 முதல் 12.01.2010 வரையிலும் நடைபெறுகிறது.

இக்கண்காட்சியில்கண்ணைக்கவரும்கலைப்பொருட்கள், கலைநயம் மிகுந்த கைவினைப் பொருட்கள், கிராமக் கைவினைஞர்களால் உருவாக்கப் பட்ட பனைஓலை மற்றும் பாக்குமட்டைப் பொருட்கள், சணல், காகிதப் பொருட்கள், மலைவாழ் மகளிர் தயாரித்த கம்பளி ஆடைகள் தேன் மற்றும் மூலிகைப் பொருட்கள், கைத்தறி ஆடைகள், கண்கவர் பட்டுப் புடவைகள், வேலைப்பாடுகள் நிறைந்த மண் பொம்மைகள், மரம் மற்றும் உலோகச் சிற்பங்கள், கோரை மற்றும் மூங்கில் பொருட்கள், இல்லங்களை அழகுப்படுத்தி உள்ளங்களை கவரும் அலங்காரப் பொருட்கள், உடலுக்கு ஊறு விளைவிக்காத உணவுப் பொருட்கள், உயரிய வேலைப்பாடுகள் நிறைந்த தோல் பொருட்கள், குழந்தைகளுக்கான ஆடைகள், கண்ணாடி பொருட்கள் மற்றும் மங்கையர் மனங்கவரும் பல்வேறு வகை உலோகத்தினால் செய்யப்பட்ட ஆபரணங்கள் போன்றவை இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

இக்கண்காட்சியைப் போன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கிருஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சிகள் நடைபெற உள்ளது.

மேலும் மாநில அளவில் முதன்முறையாக கிருஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சி, சென்னை அண்ணாநகரில் உள்ள தந்தை பெரியார் சமுதாயக் கூடத்தில் 19.12.2009 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் கிருஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சியை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.12.2009 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் துவக்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த அனைத்து அரங்குகளையும் பார்வையிட்டு, அந்த அரங்குகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களின் சிறப்பம்சம் குறித்த விபரங்களை கேட்டறிந்தார்கள்.

இவ்விழாவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., மற்றும் இதர அலுவலர்கள் பங்கேற்றனர்.

தமிழகத்தில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தரமான முறையில் உருவாக்கப்பட்டுள்ள கண்கவர் பொருட்கள் நிறைந்துள்ள இக்கண்காட்சியினை, அனைவரும் குடும்பத்துடன் கண்டு களித்து, தங்களுக்குத் தேவையான பொருட்களை மிகக் குறைந்த விலையில் வாங்கிச் செல்ல அன்புடன் அழைக்கிறோம்.

500க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பல்வகையான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

உடலுக்கு பாதிப்பை தரும்

இரத்த சோகை

வளர் இளம் பெண்களிடையே பரவலாகக் காணப்படும் ஒரு குறைபாடு இரத்த சோகை ஆகும். இதன் காரணமாகப் பெண்கள் பிரசவத்தின் பொழுதோ அல்லது பிரசவத்திற்கு பின்போ உயிரிழக்கும் அபாயம் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. பல தருணங்களில் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் உயிரிழக்கின்றன. இரத்த சோகை ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் அதைத் தவிர்க்கும் வழிமுறைகள் குறித்த முழுமையான தகவல்கள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இரத்த சோகை

நமது இரத்தத்தில் சிவப்பு மற்றும் வெள்ளை அணுக்கள் உள்ளன. இரத்த சிவப்பு அணுக்களில் உள்ள ஹீமோகுளோபினின் அளவு குறைவதால் ஏற்படுவதே இரத்த சோகை ஆகும்.

இரத்த சிவப்பு அணுக்களில் உள்ள ஹீமோகுளோபினின் பணி

இரத்த சிவப்பு அணுக்களில் உள்ள ஹீமோகுளோபின்தான் நம் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளுக்கும், திசுக்களுக்கும் தேவையான பிராண வாயுவை (ஆக்ஸிஜன்) எடுத்துச் செல்லும் முக்கியமான வேலையைச் செய்து வருகிறது. உடலில் உள்ள ஹீமோகுளோபினின் அளவு குறையும் பொழுது நமது உடல் உறுப்புகளுக்கு தேவைப்படும் பிராணவாயு கிடைப்பதில் குறைவு ஏற்படுகிறது. இதனால் உடல் சோர்வடைவதோடு, மூளையின் செயல் திறனிலும் குறைவு ஏற்படுகிறது.

இரத்த சோகை ஏற்பட முக்கியக் காரணங்கள்

பருவம் அடைந்த பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அதிக அளவு இரத்தப் போக்கினால் அவர்கள் உடலில் இரும்புச் சத்தின் அளவு வெகுவாகக் குறைவதால் இரத்த சோகை ஏற்படுகிறது. பெண்களுக்குப் பிரசவத்தின் பொழுது ஏற்படும் அதிக அளவிலான இரத்தப் போக்கு மற்றும் கர்ப்ப காலத்தில் இரும்புச் சத்து அதிகமுள்ள பொருட்களை உணவில் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பதும் இரத்த

நமது இரத்தத்தில் சிவப்பு மற்றும் வெள்ளை அணுக்கள் உள்ளன. இரத்த சிவப்பு அணுக்களில் உள்ள ஹீமோகுளோபினின் அளவு குறைவதால் ஏற்படுவதே இரத்த சோகை ஆகும்.

சோகை ஏற்படக் காரணங்களாகும். நமது தேவைக்கு ஏற்ப உணவு உண்ணாமலிருந்தாலும் இரத்த சோகை ஏற்படும். குடற்புழு மற்றும் மலேரியா நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கும் இரத்த சோகை ஏற்படுகிறது. அதிக அளவில் இரத்தக் கசிவை ஏற்படுத்தக் கூடிய சில நோய்களாலும் இரத்த சோகை ஏற்படலாம்.

காச நோயாளிகளுக்கு நுரையீரலில் ஏற்படும் இரத்தக் கசிவு, குடல் புண் உள்ளவர்களுக்கு குடலில் ஏற்படும் இரத்தக் கசிவு, மூல நோயாளிகளுக்கு ஆசானவாயில் ஏற்படும் இரத்தக் கசிவு, பெரிய அளவில் ஏற்படும் காயங்களினால் ஏற்படும் இரத்த இழப்பு போன்றவையும் இரத்த சோகையை ஏற்படுத்தும் பிற காரணங்கள் ஆகும். மேலும் அடிக்கடி குழந்தை பெறும் பெண்களும் இரத்த சோகையினால் பாதிக்கப்படுகிறார்கள்.

இரத்த சோகையினால் ஏற்படும் பாதிப்புகள்

குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி வெகுவாக குறைகிறது. மன வளர்ச்சி குறைவு ஏற்படுகிறது. மாணவர்களின் உள்வாங்கும் மற்றும் வெளிப்படுத்தும் திறனில் குறைவு ஏற்படுவதால் படிப்பில் போதிய கவனம் செலுத்த இயலாமல் போகிறது. கிராமப்புற மாணவர்களின் உயரக் குறைவு மற்றும் அறிவுத் திறனில் குறைபாடு காணப்படுவதற்கு இதுவே காரணம்.

வளர் இளம் பெண்களுக்கு ஏற்படும் இரத்த சோகை மிகுந்த பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. மாதவிடாய் ஏற்படுவதில் ஒழுங்கற்ற தன்னை, படிப்பிலும் பிற செயல்பாடுகளிலும் போதிய கவனம் செலுத்த இயலாத நிலை, உடலுக்கு போதிய சக்தி கிடைக்காத நிலை போன்றவை ஏற்படுகிறது. ■

நுரையீரலில் ஏற்படும் இரத்தக்கசிவு, குடல்புண் உள்ளவர்களுக்கு குடலில் ஏற்படும் இரத்தக்கசிவு, மூல நோயாளிகளுக்கு ஆசனவாயில் ஏற்படும் இரத்தக் கசிவு, பெரிய அளவில் ஏற்படும் காயங்களினால் ஏற்படும் இரத்த இழப்பு போன்றவையும் இரத்த சோகையை ஏற்படுத்தும் பிற காரணங்கள் ஆகும். மேலும் அடிக்கடி குழந்தை பெறும் பெண்களும் இரத்த சோகையினால் பாதிக்கப்படுகிறார்கள்.

இரும்புச் சத்துள்ள உணவு வகைகள்

கீரை வகைகளில் முளைக் கீரை, முருங்கைக் கீரை, அரைக்கீரை, குப்பைக் கீரை, மணத்தக்காளி கீரை, காலிபிளவர் கீரை முதலியவற்றிலும், காய்கறி வகைகளில் பாகற்காய், சுண்டைக்காய், கொத்தவரை, பீன்ஸ் மற்றும் வாழைக்காய் போன்றவற்றிலும் இரும்புச் சத்து மிகுதியாக உள்ளது. பழ வகைகளில் சீதாப்பழம், அன்னாசி பழம், மாதுளம் பழம், தர்ப்பூசணி, சப்போட்டா, பேரீச்சம்பழம் மற்றும் உலர்ந்த திராட்சை போன்றவற்றிலும், தானிய வகைகளில் கம்பு, கேழ்வரகு, கொள்ளு, கோதுமை, சாமை, பொட்டுக்கடலை, சோயாபீன்ஸ் மற்றும் பட்டாணி போன்றவற்றிலும் இரும்புச் சத்து மிகதியாக உள்ளது. ஆட்டுக்கறி, ஈரல், முட்டை, இறால் போன்றவை இரும்புச் சத்து நிறைந்த அசைவ உணவுப் பொருட்கள் ஆகும்.

பொட்டுக்கடலை கஞ்சி, கேழ்வரகுக் கஞ்சி, வெல்லம், அதிரசம், வெல்லம் கலந்த கடலை உருண்டை, கடலை மிட்டாய், பொட்டுக்கடலை பாயாசம், கருப்பட்டி மற்றும் கேழ்வரகு மாவு கலந்த தின்பண்டங்கள், அரிசி, கடலை, வெல்லம், சிறு பருப்பு கலந்து செய்யப்படும் பொரிவிளங்காய் உருண்டை மற்றும் பொரி உருண்டை போன்றவற்றை உண்பதாலும், பனங்கற்கண்டு கலந்து பால் அருந்துவதாலும் நம் உடலுக்கு இரும்புச் சத்து கிடைக்கிறது.

உணவருந்திய உடனேயோ அல்லது உணவருந்தியதிலிருந்து ஒரு மணி நேரத்திற்குள்ளேயோ தேநீர், காபி போன்ற பானங்களை அருந்தக் கூடாது. அவ்வாறு அருந்துவது நாம் உண்ணும் உணவிலிருந்து இரும்புச் சத்தை, நமது உடல் கிரகித்துக் கொள்வதை வெகுவாகக் குறைக்கிறது.

இரத்த சோகை ஏற்படும் அபாயத்தை தவிர்க்க மேற் கொள்ள வேண்டிய செயல்பாடுகள்

இரும்புச் சத்து நிறைந்த உணவு வகைகளை அன்றாடம் தவறாமல் அருந்துதல்.

அன்றாட உணவுக்குப் பின் கூடுதலாக புரதச் சத்து நிறைந்த நிலக்கடலை, கடலை மிட்டாய் போன்றவற்றை உண்ணுதல்.

11 வயது முதல் 19 வயது வரை உள்ள வளர் இளம் பெண்கள் தவறாமல் இரும்புச் சத்து மாத்திரையை தொடர்ந்து வாரம் ஒருமுறை சாப்பிடுதல்.

வளர் இளம் பெண்கள், 3 மாதங்களுக்கு ஒருமுறை அங்கன்வாடி மையத்திற்கு சென்று அங்குள்ள எடை போடும் கருவியில் தங்கள் எடையைப் பார்த்து தங்கள் உடல் வளர்ச்சியைத் தொடர்ந்து கண்காணித்தல்.

பெற்றோர்கள் தங்கள் வீட்டிலுள்ள வளர் இளம் பருவத்தினரை, சத்தான உணவைச் சாப்பிடச் செய்வதோடு, அவர்களின் வளர்ச்சியில் தொடர்ந்து அக்கறை செலுத்தி வருதல்.

இரும்புப் பாத்திரங்களில் உணவைச் சமைப்பதால் உடலுக்கு இரும்புச் சத்து கிடைக்கிறது. எனவே இரும்புப் பாத்திரங்களையே சமையலுக்குத் தொடர்ந்து பயன்படுத்தி வருதல்.

ஆண், பெண் என இன பேதம் பாராட்டாமல் வளர் இளம் பெண்களுக்கு உணவு வழங்குவதில் பெற்றோர் போதிய கவனம் செலுத்தி வருதல்.

பெற்றோர் தன் சுத்தம் மற்றும் சுகாதாரப் பழக்கங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு, தங்கள் வீட்டிலுள்ள வளர் இளம் பருவத்தினர் அவற்றைப் பேண ஊக்குவிப்பதோடு, அதற்குத் தேவைப்படும் உதவிகளையும் செய்து தருதல்.

இசை உலகின் பேரரசி

எம். எஸ். சுப்புலட்சுமி

"சிலரின் வாழ்க்கைக்குப் பிறகு அவர்களைப் பற்றிய வரலாறு எழுதப்படும். இதில் தேவை கருதி சில விஷயங்கள் நீக்கப்படும். சில விஷயங்கள் பெரிதுபடுத்தப்படும். இந்த முகமூடிகள் எதுவும் இல்லாமல் வாழும் வரலாறாக, வாழ்வின் ஒவ்வொரு பக்கமும் திறந்த புத்தகமாக வாழ்ந்தவர் எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள்"

இசையின் வடிவம் காற்று என்பார்கள். அதற்கு எந்த ஒரு குறிப்பிட்ட வடிவமும் இல்லை. காற்று எந்த இசை கருவிக்குள் புகுந்து வெளி வருகிறதோ அதைப் பயன்படுத்துகிறவர்களைப் பொறுத்து மாய உருக் கொள்ளும். அதனைக் காதினால் உணரலாமே தவிர, கண்களால் பார்க்க இயலாது. சரி இசையைக் கண்களால் பார்த்தே ஆக வேண்டும் என்று நம்மில் எத்தனை பேருக்கு ஆசை இருக்கும். அந்த ஆசையைப் பூர்த்தி செய்யும் வகையில் இசை கொண்ட மனித வடிவம்தான் எம். எஸ். சுப்புலட்சுமி.

ஓர் இந்துப் பெண், இந்தியப் பெண் எப்படி இருப்பாள். அவளது வாழ்க்கை முறை எப்படி இருக்கும் என்பதற்கு உதாரணமாக இருந்தார். இசைப் பேரரசி. உலகம் முழுவதும் அறிந்த புகழ் வாய்ந்த பெண்மணி. தயாள குணம் கொண்ட பெண் வள்ளல். மிகச் சிறந்த திரைப்படத் தாரகை. இப்படிப் பல முகங்களைக் கொண்டிருந்த போதும் ஒரு நல்ல மனைவி. ஒரு நல்ல தாய் என்ற ஸ்தானத்தை இத்தனை முகங்களுக்குள்ளும் தக்க வைத்துக் கொண்டிருந்தவர்.

இத்தகைய ஒரு மகத்தான வாழ்க்கை மாய மந்திரத்தாலோ, அதிர்ஷ்டத்தாலோ அவருக்குக் கிடைத்து விடவில்லை. அதற்குப் பின்னால் அவரது கடினமான உழைப்பு, உரிய நேரத்தில் உரிய முடிவுகளை தைரியமாக எடுத்த திறன். எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் மீதும், தன் திறமையின் மீதும் அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை. எப்போதும் எளிமை. பணிவு இவைதான் இந்தச் சாதனையின் பின்னணியாக இருப்பவை. சிலரின் வாழ்க்கைக்குப் பிறகு அவர்களைப் பற்றிய வரலாறு எழுதப்படும். இதில் தேவை கருதி சில விஷயங்கள் நீக்கப்படும். சில விஷயங்கள் பெரிதுபடுத்தப்படும். இந்த முகமூடிகள் எதுவும் இல்லாமல் வாழும் வரலாறாக, வாழ்வின் ஒவ்வொரு பக்கமும் திறந்த புத்தக மாக வாழ்ந்தவர் எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள்

இசையும் தமிழும் இணைந்து வளரும் மதுரை மாநகரில் வசித்து வந்த இசைக்கலைஞரான சண்முகவடிவு அம்மாள் – சுப்பிரமணி அய்யர் தம்பதியருக்கு மகளாக 1916ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் தேதி பிறந்தவர்தான் எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள். இவர்தம் சகோதரர் சக்திவேல், சகோதரி வடிவாம்பாள் ஆகியோருடன் இசை தொடர்பான சூழலில் வளர்த்தார். சுப்புலட்சுமிக்கு அவரது தாயாரே முதலில் குருவானவர். இன்னிசை வீணையுடன் சேர்ந்து பாடி வந்த இவர் இசையில் வெகுவிரைவில் புகழ் பெற்றார்.

அக்காலத்தில் எச்.எம்.வி. என்ற பிரபல இசைத்தட்டு நிறுவனம் பிரபல இசைக் கலைஞர்களின் பாடல்களை இசைத் தட்டுகளில் பதிவு செய்து மலிவு விலையில் விற்பனை செய்து வந்தது. இந்நிறுவனத்தில் இசைப் பதிவிற்காக மதுரையில் இருந்து சண்முகவடிவு தனது மகள் சுப்புலட்சுமியுடன் சென்னை வந்தார். இசைத்தட்டுக்கு வீணை வாசித்துக் கொடுத்த சண்முகவடிவு தனது மகள் சுப்புலட்சுமியின் பாடல்களை இசைத்தட்டில் பதிவு செய்து வெளியிடுமாறு அந்நிறுவனத்தைக் கேட்டார். 10 வயது சிறுமியின் பாடலை பதிவு செய்து வெளியிட்டால் பெரும் நட்டம் ஏற்படும் என நினைத்து இசைத்தட்டு நிறுவனம் தயங்கியது. எனினும் சண்முகவடிவு தனது முடிவில் உறுதியாக இருந்தார். இறுதியில் சுப்புலட்சுமியின் பாடல்களை பதிவு செய்து வெளியிட நிறுவனம் ஒப்புக் கொண்டது.

சிறுமி சுப்புலட்சுமி தமிழ்க் கடவுள் முருகன் புகழ் பாடும் 'மரகதவடிவு' என்ற பாடலை பாடினார். இப்பாடல்களை இசைத்தட்டில் பதிவு செய்து 10 வயது சிறுமியின் பாடல் என்ற தலைப்பிட்டு இசைத்தட்டுகள் வெளியாகின. சுப்புலட்சுமியின் இசையை முதன் முதலாகத் தமிழகம் இசைத்தட்டு வாயிலாக கேட்க ஆரம்பித்தது. சில நாட்களிலேயே அனைத்து இசைத்தட்டுகளும் விற்றுத் தீர்ந்தன. சுப்புலட்சுமியின் புகழ் தமிழகமெங்கும் பரவியது. அதன் பிறகு, தன் தாயுடன் அனைத்துக் கச்சேரிகளுக்கும் சென்றார். தாய் வீணை வாசிக்க அதற்கேற்ப மகள் பாடினார். இந்த இசை இணைப்பு இரசிகர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எங்கு சென்றாலும் இருவருக்கும் நல்ல வரவேற்பு கிடைத்தது. தனிக் கச்சேரி செய்யும் அளவிற்குத் தன் திறமையை வளர்த்துக் கொண்டார் சுப்புலட்சுமி.

சுப்புலட்சுமியின் இசையை முதன் முதலாகத் தமிழகம் இசைத்தட்டு வாயிலாக கேட்க ஆரம்பித்தது. சில நாட்களிலேயே அனைத்து இசைத்தட்டுகளும் விற்றுத் தீர்ந்தன. சுப்புலட்சுமியின் புகழ் தமிழகமெங்கும் பரவியது. அதன் பிறகு, தன் தாயுடன் அனைத்துக் கச்சேரிகளுக்கும் சென்றார். தாய் வீணை வாசிக்க அதற்கேற்ப மகள் பாடினார்.

தனது 15வது வயதில் மதுரையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் தனிக்கச்சேரி செய்தார். இதுதான் அவரின் முறையான இசை அரங்கேற்றம் என்று எடுத்துக் கொள்ளலாம். அதன் பிறகு தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து தனிக்கச்சேரி செய்யத்தொடங்கினார். அடுத்தடுத்து சுப்புலட்சுமியின் இசைத்தட்டுகளும் வெளிவரத் தொடங்கின. 'கோகிலகானா' என்ற பட்டம் ரசிகர்களால் அவருக்கு வழங்கப்பட்டது. ■ (தொடரும்)

பறை

தமிழர் கலை வரலாற்றின் முகம்
டாக்டர். மு. வளர்மதி
வெளியீடு: அமுதா பதிப்பகம்
5, 5வது தெரு, எஸ்.எஸ். அவென்யூ,
சக்தி நகர், போரூர், சென்னை – 600 116.
தொலைபேசி 044 22522277
விலை: ரூ. 90/–

பறை என்ற பெயர் கொண்ட இந்நூல் சிறியதுதான். ஆனால் அரிய பெரிய கருத்துக்களை உள்ளடக்கியது. பறை என்பது பல்பொருள் தரும் இனிய இலக்கியச் சொல். பறை என்ற சொல்லினை தனது படைப்புகளில் மிகவும் உயர்வாக குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர். சங்க காலத்தில் பறை என்ற கருவிக்கு அளிக்கப்பட்ட சிறப்பினையும், தமிழர் கலை வரலாற்றின் முகமாக பறை விளங்கி வந்ததையும் இந்நூல் சிறப்புற விளம்புகிறது.

சரியாக முடிவெடுக்க சக்ஸஸ் ஃபார்முலா

'முடிவெடு புத்திசாலியாக இரு'
ராபர்ட் இ. குந்தர்
வெளியீடு: கிழக்கு பதிப்பகம்
33/15, எல்டாம்ஸ் ரோடு,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.
தொலைபேசி 044 42009601
விலை: ரூ. 125/–

தவறான முடிவுகளையும் நமக்கேற்றவாறு பயன்படுத்திக் கொள்வது எவ்வாறு? முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் நாம் மேற்கொள்ள வேண்டிய முன் தயாரிப்புகள் யாவை? முடிவின் விளைவுகளை முன்கூட்டியே யூகிப்பது சாத்தியமா? சரியாகவும், நேர்மையாகவும் ஒரு முடிவு அமைவதற்கு நாம் செய்ய வேண்டியவைகள், செய்யக் கூடாதவைகள் யாவை? மேற்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பது இப்புத்தகம்.

சுய உதவிக் குழுக்களுக்கு ஏற்ற

தேங்காய் நார் மற்றும் கயிறு உற்பத்தித் தொழில்

இன்று நாம் பயன்படுத்தும் பொருட்களில் தேங்காய் நார் மற்றும் கயிற்றில் செய்யப்பட்டுள்ள பொருட்கள் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. கால் மிதியடிகள், அலங்காரப் பொருட்கள், அழகிய கைப்பைகள், பொம்மைகள் என பல்வேறு வடிவங்களில் தேங்காய் நார் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நாடு முழுவதும் பரவலாக நடைபெற்று வரும் இத்தொழிலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். நம் நாட்டிலிருந்து பல்வேறு அயல் நாடுகளுக்கும் கயிறு மற்றும் நார்ப் பொருட்கள் ஏற்றுமதி ஆகின்றன.

தங்க இழை என்று அழைக்கப்படும் நாரின் மூலப் பொருளான தேங்காய் வேதகாலத்திற்கு முன்பே இருந்துள்ளது. இதிகாசங்களிலும் தேங்காய் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. வரலாற்று காலத்திலேயே மலேயா, ஜாவா, சீனா மற்றும் வளைகுடா நாடுகளுக்கு தேங்காய் நார் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக வரலாற்றுச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

கயிறு பொருட்கள் உற்பத்தியில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் முன்னணி பெற்றுள்ளன. இந்தியாவில் கி.பி. 1859ல் மலபார் பகுதியில் உள்ள ஆலப்புழையில் முதல் கயிறு தொழிற்சாலை அமைக்கப்பட்டது. இந்தியாவில் முறையே கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் கயிறு பொருட்கள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன.

இந்தியாவில் குடிசைத் தொழில் என்ற அடிப்படையில் கயிறு உற்பத்தி செய்யப்படுகிறது. நாடு முழுவதும் சுமார் 5.5 இலட்சம் மக்கள் பகுதி நேரத்தில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில் ஏழாவது மற்றும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன. தொழில்நுட்பம், ஆராய்ச்சி, பயிற்சி, கலை நுணுக்கம் போன்றவைகள் இத்தொழிலில் புகுத்தப்பட்டன. ஏராளமான பெண்களுக்கு வருவாய் அளிக்கும் தொழிலாக கயிறு உற்பத்தித் தொழில் இன்றுள்ளது.

"நாடு முழுவதும் சுமார் 5.5 இலட்சம் மக்கள் பகுதி நேரத்தில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில் ஏழாவது மற்றும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

இத்தொழிலில் ஈடுபட்டு வரும் பெண்களுக்கு சிறப்பு பயிற்சித் திட்டமாக, நவீன தொழில் நுட்பம் குறித்த பயிற்சிகள், மருத்துவ வசதிகள், குழந்தைகள் காப்பகம் போன்றவை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய சந்தைகளையும், ஏற்றுமதி செய்திட வாய்ப்புகளையும் அரசு செய்து வருகிறது.

ஆரம்பத்தில் கைகளால் இயக்கப்படும் இயந்திரங்களைக் கொண்டு கயிறு உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. பின்னர் நவீன இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

கயிறு உற்பத்தியை வளர்க்கும் வண்ணம் மத்திய கயிறு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, ஒரிசா ஆகிய மாநிலங்களில் கயிறு வாரிய அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் நிதி ஆதாரங்கள், விற்பனை சந்தைகள், ஏற்றுமதி வாய்ப்புகள், மருத்துவக் காப்பீடு, நலத் திட்டங்கள், பயிற்சிகள், பெண்களுக்கான திட்டங்கள் மற்றும் கூட்டுறவு முறையில் தொழில் அமைப்புகள் உருவாக்கிட பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நலத் திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது. தற்போது சுய உதவிக் குழு உறுப்பினர்களும் கயிறு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய கயிறு வாரியத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

அவைகளில் சில கீழ்வருமாறு

1. மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கான நவீன தொழில் நுட்பம் குறித்த பயிற்சி

பயிற்சி காலம்	1 வருடம்
கல்வித் தகுதி	12ஆம் வகுப்பு
வயது	18 முதல் 45 வரை
பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	30 நபர்கள்

நூற்பு மற்றும் கயிறு உற்பத்தி, வண்ணங்கள் பகுப்பு, கால் மிதியடிகள் உற்பத்தி செய்வது குறித்து பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

2. தொழில் வல்லுநர் பயிற்சி

பயிற்சி காலம்	6 மாதங்கள்
கல்வித் தகுதி	எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும்
வயது	18 முதல் 45 வரை
பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	10 நபர்கள்

3. தொன்றுதொட்டு கயிறு உற்பத்தியில் ஈடுபட்டு வரும் பெண்களுக்கான பயிற்சி

பயிற்சி காலம்	2 மாதங்கள்
கல்வித் தகுதி	அவசியமில்லை
வயது	18 முதல் 45 வரை
பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	100 நபர்கள்

4. என்.சி.டி.டி.சி., ஆர்.சி.டி.டி.சி. பயிற்றுனர் பயிற்சி

பயிற்சி காலம்	15 முதல் 30 நாட்கள்
கல்வித் தகுதி	10ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் கயிறு வாரியத்தால் நடத்தப்படும் நவீன தொழில் நுட்ப பயிற்சி, தொழில் வல்லுநர் பயிற்சி, கயிறு தொழில் நுட்ப பயிற்சி போன்ற பிரிவில் தேர்ச்சி பெற்றவர்கள்
பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	25 நபர்கள்

5. கயிறு உற்பத்தி இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்குதல் குறித்த பயிற்சி

பயிற்சி காலம்	45 நாட்கள்
கல்வித் தகுதி	ஐ.டி.ஐ. தேர்ச்சி பெற்றவர்கள்
வயது	18 முதல் 45 வரை
பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	100 நபர்கள்

கயிறு உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டு வரும் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்குதல் குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

6. பெண்களுக்கான கயிறு உற்பத்திப் பயிற்சி

தொண்டு நிறுவனங்கள், அறக்கட்டளைகள், கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக கயிறு வாரியத்தால் பெண்களுக்காக நடத்தப்படும் இப்பயிற்சியில் இயந்திரங்கள் மூலம் கயிறு உற்பத்தி குறித்த பயிற்சி வழங்கப்படுகிறது. இரண்டு மாதங்கள் நடைபெறும் இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு மாதம் ரூ. 500/– ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.

கயிறு வாரியத்தால் நடத்தப்படும் மேற்கண்ட பயிற்சிகளில் கலந்து கொண்டு வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. மேலும் அவர்கள் சொந்தமாகத் தொழில் துவங்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வசதிகளும் ஏற்பாடு செய்து தரப்படுகின்றன.

சேலம் மாவட்டத்தில் கீரை பாப்பம்பட்டி என்ற கிராமத்தில் சுமார் 200 குடும்பத்தினர் தொன்றுதொட்டு கைகளால் இயக்கப்படும் இயந்திரங்களைக் கொண்டு கயிறு உற்பத்தியில் ஈடுபட்டு வந்தனர். இன்று அவர்கள் பல்வேறு பயிற்சிகளைப் பெற்று, வங்கிக் கடன் மூலம் நவீன இயந்திரங்களுடன் கூடிய தொழிற்கூடங்களை அமைத்து கயிறு உற்பத்தியில் ஈடுபட்டு பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கயிறு வாரியத்தின் மூலம் பல்வேறு நகரங்களில் விற்பனை அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளின் மூலமாக கயிறு பொருட்கள் விற்பனை செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நவீன உலகத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப கயிறு பொருட்களின் தேவை அதிகரித்து வருவது கண்கூடு. கயிறு மற்றும் நார்ப் பொருட்களுக்கான தேவைகளைக் கருத்தில் கொண்டு, கயிறு உற்பத்தியில் சுய உதவிக் குழுக்களையும் ஈடுபடுத்திடும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வரு கின்றன. சுய உதவிக் குழுக்கள்இத்தொழிலில் ஈடுபட்டு வாழ்வில் வளம் பெற வாழ்த்துகிறோம்.

இன்று அவர்கள் பல்வேறு பயிற்சிகளைப் பெற்று, வங்கிக் கடன் மூலம் நவீன இயந்திரங்களுடன் கூடிய தொழிற்கூடங்களை அமைத்து கயிறு உற்பத்தியில் ஈடுபட்டு பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
பிராந்திய அலுவலகம், கயிறு வாரியம்,
5, அழகப்பா லே–அவுட்,
வெங்கடேசா காலனி,
பொள்ளாச்சி – 642 001.
கோவை மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி
எண் 04259 222450

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு

எச்.ஐ.வி./எய்ட்ஸ் விழிப்புணர்வு பயிற்சியினால் ஏற்பட்ட தாக்கங்கள்

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், இந்திரா மகளிர் மன்ற உறுப்பினர்

திருமதி. குமாரி

ஆண்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு ஏற்ற வகையில் பெண்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு சிறப்பான பயிற்சி. வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து பெண் களுக்குள் வெளிப்படையாக கலந்துரையாட இப்பயிற்சி யில் ஒரு வாய்ப்பு கிடைத்தது. அரசு மருத்துவமனைகளில் செயல்படும் நம்பிக்கை மையத்தில் எச்.ஐ.வி. தொற்றை தவிர்க்க எடுக்கப்படும் முன்னெச்சரிக்கை (Universal Pre-caution) நடவடிக்கைகளை (ஒருமுறை மட்டுமே பயன் படுத்தும் ஊசிகளை பயன்படுத்துதல், மேலும் அவற்றை பயன்படுத்திய உடன் அழித்தல்) நேரடியாகக் காண முடிந்தால் பல தேவையற்ற சந்தேகங்கள் நீங்கின.

பெண்ணுறையை பார்த்ததுடன், அவற்றை முறையாகப் பயன்படுத்த செயல் விளக்கம் காண்பிக்கப்பட்ட விதம் மிகவும் சிறப்பு. மறக்க முடியாத ஒன்று.

குழந்தைஆணாகவோஅல்லதுபெண்ணாகவோபிறப்பதற்கு தந்தையின் XY குரோமோசோம்தான் அடிப்படை காரணம் என்ற அறிவியல் உண்மையை இப்பயிற்சியிலேதான் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். விளக்கப் படங்களுடன் கொடுக்கப்பட்ட மூன்று புத்தகங்களையும் வீட்டில் வைப்பதன் மூலம் கணவருக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் குறித்த சந்தேகங்களை விளக்குவதுடன், வயதுக்கு வந்த பெண் மற்றும் ஆண் குழந்தைகளுக்கு உடல் மாற்றத்தின் பயங்களையும் போக்கி, சிறந்த வழிகாட்டியாக இருக்க முடிகிறது.

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், பாரதமாதா குழு உறுப்பினர்

திருமதி. மனோன்மணி

கிராமத்தில் உள்ள எல்லா பெண்களுக்கும் தேவையான மிக முக்கிய பயிற்சி. ஏனென்றால் எய்ட்ஸ் என்ற ஒரு வார்த்தையை மட்டுமே பட்டும்படாமல் கேட்டிருந்த எங்களுக்கு அதன் தாக்கத்தை முழுமையாக உணரச் செய்த பயிற்சி இது.

நெவிரப்பின் என்ற மருந்து மற்றும் மாத்திரையை தாய்க்கும் சேய்க்கும் அரசு மருத்துவமனைகளில் (நம்பிக்கை மை யம்) இலவசமாக கொடுத்து எச்.ஐ.வி. தொற்றில்லாத குழந்தையை பெற முடியும் என்ற விபரத்தையை இப்பயிற்சியின் வாயிலாகத்தான் தெரிந்து கொண்டேன்.

திருமதி. சந்திரா, உறுப்பினர்

ஆண் பெண் கலந்து நடத்தப்படுகிற பயிற்சியில் கேள்வி கேட்க முடியாமல் கூச்சத்துடன் சந்தேகத்தை மீண்டும் சுமந்தபடி இவ்வளவு வயது வரை இருந்தேன்.

பெண்களுக்காக பெண்களால் நடத்தப்பட்ட இந்த எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பயிற்சியில்தான் எல்லா சந்தேகங்களையும் முழுமையாகக் கேட்டு தெரிந்து தெளிந்து இருக்கிறேன்.

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், ஜாஸ்மின் மகளிர் குழு உறுப்பினர்

திருமதி. ஷீலா

சரியான நேரத்தில் கணவருக்கும், குழந்தைகளுக்கும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றி எடுத்துக் கூற விளக்கமாக, தெளிவாக எடுத்துரைத்த பயனுள்ள பயிற்சி இது.

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், புதுமலர் மகளிர் சங்க உறுப்பினர்

திருமதி. மாலா

கொசு மூலமாக எச்.ஐ.வி./எய்ட்ஸ் பரவாது என்பதை அறிவியல்பூர்வமாக விளக்கியது, என் நீண்ட நாள் பயத்தைப் போக்கியது.

மேலும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் ஒரு தொற்று நோய் இல்லை என்பதை விளக்கி பாதிக்கப்பட்டோரையும், அவர்களின் குழந்தைகளையும் அரவணைக்க உணர்த்திய பயிற்சி இது.

புத்தாண்டே வருக...!

புத்தாண்டே வருக...
மங்கையர் வாழ்வில்
புது வசந்தம் தருக... தருக...
அடிமையென அடுப்படியில்
அச்சத்துடன் வாழ்ந்த பெண்கள்
அவனியிலே சாதனைகள்
பல படைக்க வந்துவிட்டார்
விண்ணையும் சாடிவிட்டார்
கடல் தன்னையும் தாண்டிவிட்டார்
விஞ்ஞானம் படித்து பல
விசைகளையும் அறிந்து கொண்டார்
மங்கையர் வாழ்வில் அஞ்ஞான இருளகற்றி
அறிவொளியை தினம் ஏற்றும்
முற்றமே நீ மேலும் மேலும் வளர
எங்களது புத்தண்டு வாழ்த்துகள்...

கமலம் – ஹேமா
குத்தனூர்
காஞ்சிபுரம் மாவட்டம்.

பொன்னான திட்டம்...!

மகளிர் திட்டமம்மா
மாநிலமே மெச்சுதம்மா!
பெண்களை உயர்த்தும்
பொன்னான திட்டமம்மா!!
காவலரும் பெண்களம்மா
கலெக்டரும் பெண்களம்மா!
விண்வெளியில் பெண்களம்மா
விந்தை புரியும் கண்களம்மா!!
தலைமைப் பதவி தந்ததே
தாய்குலத்திற்கு பெருமை சேர்த்ததே!
சுழல் நிதி அள்ளித் தந்ததே
சுய தொழில் சொல்லித் தந்ததே!!
குலத்தொழில் பயத் தொழிலை
கூண்டோடு ஓடச் செய்ததே!
தொழிற்பயிற்சி தந்திங்கே
குழு தொழிலாய் மாற்றியதே!!
கோயில் இல்லா ஊரில்
குடியிருக்க வேணாங்க!
குழு இல்லா ஊரினிலே
நாம இருக்க கூடாதுங்க!!

திரு. மு. கருப்பண்ணன்,
கரூர் மாவட்டம்.

வாழ்ந்து காட்டுவோம்

ஸ்ரீ காளியம்மன் பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு
30

31
மாற்றுத்திறன் படைத்தோருக்கு ஊக்கமளிக்கும் திட்டம்



தன்னம்பிக்கை
32

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

ஊனம் உடலுக்குத்தான்
உழைப்பிற்கு இல்லை

மனநிலை குன்றிய

சத்யாவின் வாழ்வில் உயர்வு

ஊராட்சி	: கடமலைகுண்டு
ஊர்	: மேலப்பட்டி, கடமலை
பெயர்	: சத்யா
தந்தையார்	: மணி
தாயார்	: பஞ்சம்மாள்
தம்பி	: 1ஆம் வகுப்பு
தங்கை	: 3ஆம் வகுப்பு
சிறப்புக் குழு பெயர்	: பட்டாலம்மன் ஊனமுற்றோர் குழு
ஊனத்தின் தன்மை	: மனநிலை குன்றியவர்
சதவிகிதம்	: 65 சதவிகிதம்
கல்வித் தகுதி	: இல்லை (பள்ளிக்கு செல்லவில்லை)

தேனி மாவட்டம், க.மயிலை ஒன்றியம், கடமலைகுண்டு ஊராட்சி, கே.மேலப்பட்டியில் வசிப்பவர்கள் மணி – பஞ்சம்மாள் தம்பதியினரின் மூத்த மகளாய் பிறந்தவர் சத்யா. எனவே அளவுக்கு அதிகமாய் அன்பை செலுத்தினர். ஆனால் தங்கள் மகளின் செயல்பாடுகளில் மாற்றங்கள் உள்ளதை புரிந்து கொண்டனர். தங்களது மகளின் மனநிலை மாறுபட்டுள்ளதை அறிந்து மிகவும் வேதனைப்பட்டனர். சிறப்பு பள்ளிக்கு செல்ல வசதியில்லாத காரணத்தால் சத்யாவால் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. இந்நிலையில் கடமலைக்குண்டு கிராமவறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ஊனமுற்றோர் குழு அமைப்பதை கேள்விப்பட்டு, பட்டாளம்மன் ஊனமுற்றோர் குழுவில் உறுப்பினராய் இணைந்தார். அதன் பின்பு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ஊனமுற்றோர் அடையாள அட்டையினைப் பெற்றார்.

பட்டாளம்மன் ஊனமுற்றோர் குழு சிறப்பாக செயல்பட்டு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ஆதார நிதியாக ரூ. 10 ஆயிரம் பெற்றனர். இந்நிதியை தனிநபர் தொழில் கடனாக கொடுக்க குழு தீர்மானித்தது. இதை அறிந்த சத்யாவின் தந்தை தனது மகளுடனே இருந்து தான் தொழில் செய்ய வேண்டும் என்ற தனது ஆசையை நிறைவேற்ற டீக்கடை வைப்பதற்காக ரூ. 10 ஆயிரம் கடன் தொகை பெற தனது விருப்பத்தைத் தெரிவித்தனர். சத்யாவின் குடும்ப நிலையை அறிந்த குழுவினர் அவர்களுக்கு கடன் தொகை கொடுத்தனர். அதன் பின்பு சிறப்பு நிதி மூலம் ரூ. 5 ஆயிரம் கடன் தொகை பெற்று கடை திறந்தனர். கடையில் நல்ல விற்பனை நடைபெற்றதால் வருவாய் பெருகியது. சத்யாவுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு விற்பனைக்கு அமர்த்தப்பட்டார். தங்களுக்குக் கிடைத்த வள மான வாழ்வு ஊனமான தங்களது மகளால்தான் கிடைத்தது என்று பெருமிதம் கொண்டு, சத்யாவே தங்களின் தெய்வம் என்கின்றனர் அவரின் பெற்றோர். ■

> தொழில் வாய்ப்பும், வருமானமும், உயர்வும் ஊனமான தங்களது மகளால் கிடைத்தது என்று பெருமிதம் கொண்டு, சத்யாவே தங்களின் தெய்வம் என்கின்றனர் அவரின் பெற்றோர்.

ஊனம் உடலுக்குத்தான்

உழைப்பிற்கு இல்லை

எனது பெயர் வேலுச்சாமி. நான் தேனி மாவட்டம், கோடங்கிப்பட்டி ஊராட்சியில் வசித்து வருகின்றேன். எதிர்பாராவிதமாக நடைபெற்ற விபத்தில் என்னுடைய கால் ஒன்று ஊனம் அடைந்து விட்டது. இதனால் நான் வெளியிடங்களுக்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்தேன். மேலும் எந்தவிதமான வேலையையும் செய்யாமல் இருந்தேன். எனக்கு மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் உள்ளனர். என் மனைவி தொழிற்சாலை ஒன்றில் கூலி வேலைக்குச் சென்று அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு எங்களைக் காப்பாற்றி வந்தார். இந்நிலையில் வாழ்க்கையில் நாம் முன்னேறுவோமா என்பதே கேள்விக்குறியாக இருந்தது.

இச்சமயத்தில்தான் தமிழக அரசின் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்கள் ஊருக்கு வந்தது. இத்திட்டத்தில் ஊனமுற்றோருக்கு தனி கவனம் செலுத்துவதாக கூறினர். இந்தத் திட்டத்தின் மூலம்

எங்கள் ஊரிலேயே என்னை போன்ற ஊனமுற்றோர், நலிவுற்றோர், ஏழை, மிகவும் ஏழை பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு உதவுவதற்காக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்டது.

வாழ்க்கையே முடிந்தது என்று வெறுப்படைந்து இருந்த நிலையில், இச்சங்கத்தின் உறுப்பினர்கள் என்னைத் தொடர்பு கொண்டு, ஆறுதல்படுத்தி உன்னால் முடியும் என்று ஊக்கப்படுத்தி எனக்கு மறுவாழ்வு கொடுத்து, தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு உதவி புரிந்தனர். மேலும் என்னைப் போன்ற ஊனமுற்றவர்களை உள்ளடக்கிய தாமரை ஊனமுற்றோர் சுய உதவிக் குழுவை உருவாக்கி எங்கள் குழுவிற்கு பயிற்சியும் அளித்தனர். எங்கள் குழுவிற்கு ஆதார நிதியாக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ரூ. 10 ஆயிரம் வழங்கினர்.

என் மனைவி தொழிற்சாலை ஒன்றில் கூலி வேலைக்குச் சென்று அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு எங்களைக் காப்பாற்றி வந்தார். இந்நிலையில் வாழ்க்கையில் நாம் முன்னேறுவோமா என்பதே கேள்விக்குறியாக இருந்தது.

மேலும் எனக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் செயற்கை கால் வாங்கித் தந்தனர். நான் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் சிறு கடனாக ரூ. 5 ஆயிரம் பெற்று, மாட்டு வண்டி மூலம் உப்பு விற்கும் தொழிலைத் தொடங்கினேன். தற்பொழுது இத்தொழில் மூலம் நாள் ஒன்றிற்கு ரூ. 100/– வரை வருமானம் கிடைக்கிறது.

எங்கள் கிராம ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு என்னைப் போன்ற ஊனமுற்றோர் மறு வாழ்வு பெற வழிகாட்டுதலும், ஆலோசனைகளையும் வழங்கிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத் திற்கு எனது சார்பாக இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ■

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு மனமார்ந்த நன்றி

பெயர் : கே. மகேந்திரன்
வயது : 26
கிராமம் : பூமலைக்குண்டு
திறன் வளர்ப்புப் பயிற்சி: கனரக வாகன ஓட்டுனர்

என் பெயர் மகேந்திரன், எனது தந்தையின் பெயர் வி. கிருஷ்ணசாமி. தேனி மாவட்டம், பூமலைக்குண்டு ஊராட்சியில் நான் வசித்து வருகிறேன். என்னுடைய அம்மா மிக நீண்ட காலமாக காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். எனது தந்தையார் விவசாய கூலி வேலை செய்து வருகிறார். நானும் எனது தந்தையாரும் மிகவும் சிரமப்பட்டு கூலி வேலை செய்து, அந்த வருமானத்தில் எனது தாயாரின் மருத்துவச் செலவையும், எங்களின் அன்றாடச் குடும்பச் செலவுகளையும் செய்து வந்தோம். எங்களின் குறைவான கூலியால் மேற்கண்ட செலவுகளை சமாளிக்க முடியாமல், மிகவும் சிரமப்பட்டு வாழ்க்கையை நடத்தி வந்தோம்.

அப்போது எங்களது ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வந்தது. அத்திட்டத்தில் எங்களது குடும்பத்தை இலக்கு மக்கள் பட்டியலில் ஊர் மக்கள் தேர்வு செய்திருந்தனர்.

தேர்வு செய்யப்பட்ட இலக்கு மக்களைக் கொண்டு வறுமை ஒழிப்புச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு, அச்சங்கத்தின் மூலம் எங்களது ஊரில் உள்ள ஏழை இளைஞர்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டதை அறிந்து நானும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு சென்று மனு கொடுத்தேன்.

இதன் மூலம் நான் சென்னையில் உள்ள அசோக் லேலண்ட் நிறுவனத்தில் கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி பெற்றேன். பயிற்சி முடிந்து கனரக வாகன ஓட்டுனர் உரிமம் பெற்று, லாரி ஓட்டுனராக தற்போது பணியாற்றி, ஊதியமாக மாதம் ரூ. 6000/– பெற்று வருகிறேன்.

இந்த வருமானத்தின் மூலம் ஒரு ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து, என் தந்தையார் விவசாயத்தை கவனித்து வருகிறார். மேலும் எனது தாயாரின் மருத்துவ செலவையும் மேற் கொண்டு, குடும்பத்தையும் மிகவும் சிறப்பாக கவனித்து வருகிறேன். எனது வாழ்வில் அணையாத ஒளி விளக்கேற்றி வைத்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும் எனது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

ஸ்ரீ காளியம்மன்

பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு

தேனி மாவட்டம், போடி ஒன்றியத்திலுள்ள அணைக்கரைப்பட்டி பஞ்சாயத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சார்பாக விடுபட்ட இலக்கு மக்களை சுய உதவிக் குழுக்களாக அமைத்துள்ளனார். நாங்களும் புதிய சுய உதவிக் குழுக்களில் இணைந்துள்ளோம். கிராம வள ஆய்விற்குப்பின் எங்களுடைய கிராமத்தில் புதிய பால் பண்ணை ஆரம்பிக்கத் திட்டமிட்டோம். இதன்படி 11 சுய உதவிக் குழுக்களிலிருந்து 50 நபர்கள் இணைந்து ஒரு தொழில் கூட்டமைப்பை ஏற்படுத்தி வாழ்ந்து காட்டுவோம் திட்ட பணியாளர்கள் துணையுடன் திட்ட அறிக்கை தயாரித்தோம். அதன் மொத்த மதிப்பு ரூ. 23,50,000/– ஆகும். பின்னர் ஸ்ரீ காளியம்மன் பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பை ஏற்படுத்தி தமிழ்நாடு சங்க பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தோம்.

> “நபர் ஒருவருக்கு சராசரியாக ரூ. 2000/– முதல் ரூ. 2500/– இலாபம் கிடைக்கிறது. மேலும் தொழில் கூட்டமைப்பிற்கு மாதாந்திர வருமானமாக சராசரியாக ரூ. 3000/– வரை கிடைக்கிறது. தற்போது எங்கள் கூட்டமைப்பில் உள்ள 50 குடும்பங்களும் பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் நல்ல பயன் பெற்று வருகிறோம்.”

அதன்பின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து தங்களுடைய பங்களிப்பாக ரூ. 2,40,000/–தைக் கொண்டு வங்கியில் தனிக் கணக்கினைத் துவக்கினோம். வாழ்ந்து காட்டுவோம் திட்ட நிதியின் முதல் தவணையாக ரூ. 5,70,000/–மும், வங்கியிலிருந்து ரூ. 4,00,000/–மும் பெற்று, கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் பால் மாடு வாங்கினோம். இதற்கிடையே ஈரோட்டிலுள்ள தேசிய பால் உற்பத்தி வளர்ச்சித் துறைக்கு எங்கள் தொழில் கூட்டமைப்பிலுள்ள 18 நபர்கள் பயிற்சி மற்றும் களப்பார்வைக்கு சென்று வந்தோம். அதன்பின் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் மாடு பராமரிப்பு, தீவனம், தடுப்பூசி மற்றும் கருவூட்டல் முறைகள் குறித்து பகிர்ந்து கொள்ளப்பட்டது.

தற்போது எங்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் அதிகமாகக் கிடைக்கிறது. மேலும் நபர் ஒருவருக்கு சராசரியாக ரூ. 2000/– முதல் ரூ. 2500/– இலாபம் கிடைக்கிறது. மேலும் தொழில் கூட்டமைப்பிற்கு மாதாந்திர வருமானமாக சராசரியாக ரூ. 3000/– வரை கிடைக்கிறது. தற்போது எங்கள் கூட்டமைப்பில் உள்ள 50 குடும்பங்களும் பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் நல்ல பயன் பெற்று வருகிறோம். எங்களின் தொழில் கூட்டமைப்பின் வெற்றி மற்ற பஞ்சாயத்துகளில் தொழில் கூட்டமைப்புகளை ஏற்படுத்த ஊக்குவிப்பாக அமையும் என நம்புகிறோம். அடுத்து 2ஆம் தவணை நிதி பெற்று இந்த தொழில் கூட்டமைப்பை தொடர்ந்து நடத்தி மேலும் வளர்த்து, மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருப்போம் என உறுதியளிக்கிறோம். ■

மாற்றுத்திறன் படைத்தோருக்கு ஊக்கமளிக்கும் திட்டம்

தேனி மாவட்டம், இராசிங்காபுரம் பஞ்சாயத்து, வார்டு 1 கிழக்குத் தெருவில் வசித்து வருபவர் திருமதி. வனிதா (வயது 26), கணவர் பெயர் ஈஸ்வரன். நமது கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் தனிநபர் கடன் பெற்று கடன் பெற்று பயன் அடைந்தவர்களில், ஐந்து வயதில் போலியோ நோயினால் தாக்கப்பட்டு, கால் ஊனம் அடைந்த திருமதி வனிதாவும் ஒருவர். சிறுவயதில் பள்ளிக்கு செல்லும்போது இவரது ஊனத்தைப் பற்றி மாணவர்கள் கேலி செய்ததால் ஐந்தாவது வகுப்புடன் படிப்பை நிறுத்தி விட்டார்.

ஒரு பெண், ஒரு ஆண் என இரண்டு குழந்தைகள் உள்ளனர். காலப்போக்கில் கணவர் ஈஸ்வரனின் குடிப்பழக்கம் அதிகரித்ததால், வனிதா கூலி வேலைக்கு சென்று தனது குழந்தைகளைக் காப்பாற்றி வந்தார். கணவர் ஈஸ்வரன் மது குடிப்பதற்காக வனிதாவின் கூலியைக் கேட்டு அடித்து துன்புறுத்தினார்.

பள்ளிக்குசெல்வதை நிறுத்திய வனிதா, தனது தாய் லட்சுமியுடன் கூலி வேலைக்கு சென்று வந்தார். இவரது தந்தையார் அரசியல் கட்சியில் சேர்ந்து கொண்டு, எந்த வேலைக்கும் செல்லாமல், குடும்பத்தைக் கவனிக்காமல் வீணாக ஊர் சுற்றுவதும், ஆடம்பர செலவுகள் செய்வதும், சமூகப் பணி செய்வதாகக் கூறிக் கொண்டு உலா வருவதுமாக இருந்தார். இவரது வருமானத்தை மட்டுமே நம்பி வனிதாவின் குடும்பம் இருந்து வந்தது.

குடும்பத்திற்கு ஒரே மகளான வனிதாவிற்கு 15 வயது நடைபெற்ற போது, ஊனமுற்ற இவரை யாரும் மணந்து கொள்ள முன்வர மாட்டார்கள் என்ற எண்ணத்தில், இவரின் உறவினரான ஈஸ்வரன் எண்பவருக்கு திருமணம் செய்து வைத்தனர். இவர்களுக்கு ஒரு பெண், ஒரு ஆண் என இரண்டு குழந்தைகள் உள்ளனர். காலப்போக்கில் கணவர் ஈஸ்வரனின் குடிப்பழக்கம் அதிகரித்ததால், வனிதா கூலி வேலைக்கு சென்று தனது குழந்தைகளைக் காப்பாற்றி வந்தார். கணவர் ஈஸ்வரன் மது குடிப்பதற்காக வனிதாவின் கூலியைக் கேட்டு அடித்து துன்புறுத்தினார். இவைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு தனது குழந்தைகளுக்காக உயிர் வாழ்ந்தார் வனிதா.

இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் இப்பகுதிக்கு வந்தது. வனிதா ஊனமுற்றோர் பட்டியில் இடம் பெற்றதால் திருமாளம்மன் ஊனமுற்றோர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராகச் சேர்ந்தார். இவருக்கு கூலி வேலையும் சரியாக கிடைக்காததால் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் தனிநபர் கடன் உதவி கேட்டு மனு செய்தார். இந்த மனுவில் மாவு அரைக்கும் இயந்திரம் வாங்கி இட்லி மாவு தயார் செய்து விற்கப் போவதாக கூறியிருந்தார்.

அதன் பின்னர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் நேரில் சென்று ஆய்வு செய்து, இவரது உண்மையான நிலையினை உணர்ந்து, இவருக்கு

மாற்றுத்திறன் படைத்தோர் வாழ்வில் மேம்பாடு

பெயர்: வெங்கடேஷ்
வயது ; 20
தந்தையார் பெயர் : வடிவேல்
தாயார் பெயர் ; வரலட்சுமி
உடல் பாதிப்பு : மனவளர்ச்சி குன்றியவர் (மிதமான பாதிப்பு)

வெங்கடேஷ் பிறவியிலேயே மன வளர்ச்சி குறைபாடு உள்ளவர், இவரது பெற்றோர்கள் உறவு முறையில் திருமணம் செய்து கொண்டதால் இந்த ஊனம் ஏற்பட்டது. இவரது தம்பி எந்தவித ஊனமும் இல்லாமல் பிறந்தவர்.

மிதமான ஊனத்தால் பாதிக்கப்பட்ட வெங்கடேஷ் ஏழாம் வகுப்பு வரை படித்துள்ளார். தொழில் செய்யும் அளவிற்கு அறிவு வளர்ச்சி இல்லாதவர். இவரின் பெற்றோருக்கு கூலி வேலை கூட சரியாக கிடைக்காததால் மிகவும் சிரமப்பட்டு வந்தனர். வெங்கடேஷ் எந்த வேலைக்கும் செல்லாமல் ஊர் சுற்றிக் கொண்டு, பெற்றோருக்கு பாரமாக இருந்தார்.

இந்நிலையில் வெங்கடேஷின் பெயர் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் ஊனமுற்றோர் பட்டியலில் சேர்க்கப்பட்டது. பின்னர் வடக்கத்திமாரியம்மன் குழுவில் உறுப்பினராக வெங்கடேஷ் சேர்க்கப்பட்டார். குழுக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொண்டார்.

பெற்றோரிடம் பணம் வாங்கி குழுவிற்கு சேமிப்புத் தொகை செலுத்தினார். இது அவருக்கு மனம் வருந்தும்படி இருந்ததால் ஏதாவது தொழில் செய்ய எண்ணினார். இவருடைய குடும்பத்தில் இவரது விருப்பத்தைத் தெரியப்படுத்த, இவரது பெற்றோர் இவர் சார்பில் மனு கொடுத்தனர்.

இந்த மனுவில் பெட்டிக் கடை ஒன்று வைக்க விரும்புவதாகவும், இதற்கு நிதி வசதி வேண்டும் எனவும் தெரியப்படுத்தியிருந்தனர். கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் இவருக்கு மூன்று ஆயிரம் ரூபாய் வட்டியில்லாத கடனாக கொடுக்க முடிவு செய்தனர்.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் கடன் தொகை பெற்று, பெட்டிக் கடை வைத்த வெங்கடேஷ் தற்போது ரூ. 50/– வரை தினசரி இலாபமாக பெறுகிறார்.

இவரது பெற்றோர் கடைக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவது, விலைகளை தெளிவாகக் கூறுவது போன்ற உதவிகளை இவருடன் இருந்து செய்து வருகின்றனர். ஒரே தொழிலை திரும்பத் திரும்பச் செய்ய இவருக்கு நன்கு பழக்கமாகி விட்டது. இதனால் இவர் இந்த தொழிலை சிறப்பாக செய்து வருகிறார். இவரின் பெற்றோரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வட்டியில்லாத கடனாக ரூ. 3000/– கொடுத்தனர். இத்தொகையில் மாவு அரைக்கும் இயந்திரம் ஒன்றினை வாங்கி, தினசரி மாவு அரைத்து விற்பனை செய்வதன் மூலம் தினசரி ரூ. 50/– வரை இலாபம் கிடைத்து வருகிறது, வாடிக்கையாளர்கள் இவரது வீட்டிற்கே வந்து மாவு வாங்கிச் செல்கின்றனர். இப்பொழுது தனது குடும்பம் பொருளாதார நிலையில் முன்னேறி உள்ளது என வனிதாவே கூறியதை தனிநபர் ஆய்வின்போது தெரிந்து கொண்டோம். ■

தன்னம்பிக்கை

தேனி மாவட்டம், இராசிங்காபுரம் பஞ்சாயத்தில் வசித்து வருபவர் மதன்குமார் (வயது 20). இவரின் பெற்றோர் போத்தன் – வீரம்மாள். மதன்குமார் பிறக்கும் போது இவரின் குடும்பத்திற்கு சொந்தமாக வீடு மற்றும் நிலம் போன்றவை இருந்தன. மதன குமாரும் அவரது அண்ணனும் இராசிங்கபுரம் அரசு பள்ளியில் படித்து வந்தனர். 7ஆம் வகுப்பு படிக்கும் போது விளையாடச் சென்ற இடத்தில் கிணற்றில் தவறி விழுந்ததில் அதிர்ச்சி ஏற்பட்டு, மதன்குமாருக்கு இடது கால், வலது கை ஆகியவற்றில் ஊனமும், திக்குவாயும் ஏற்பட்டது. பின்னர் காதும் கேட்காமல் போய் விட்டது. இவரின் பெற்றோர் சொத்துக்களை விற்றும், கடன் வாங்கியும் மருத்துவம் செய்தனர்.

இந்நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் இப்பகுதிக்கு வந்தபின் மதன்குமாரின் பெயர் ஊனமுற்றோர் பட்டியலில் தேர்வு செய்தனர்.

இவருக்கு இவரின் குழுவும் ஒத்துழைப்பு கொடுத்தது. ஆனால் வியாபாரம் செய்ய தேவையான நிதியை கடனாக கொடுக்கும் அளவிற்கு குழுவில் நிதி இல்லாததால், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு குழு மூலம் விண்ணப்பித்தனர். கிராம வறுமை ஒழிப்புச் சங்கமும் இவரது உண்மை நிலையினை அறிந்து வட்டியில்லாக் கடனாக ரூ. 3000/–த்தை வழங்கி, காய்கனி வியாபாரம் செய்ய உதவி செய்தது.

இப்பொழுது மதன்குமார் அங்காடியிலும், வீட்டிலும் காய்கனிகளை வைத்து வியாபாரம் செய்து வருவதன் மூலம், தினம் ரூ. 75/– வரை இலாபம் பெற்று வருகிறார். இதனால் இவரது குடும்பமும் மகிழ்ச்சி அடைந்துள்ளது. தான் பெற்ற கடன் தொகையை திரும்பச் செலுத்தியவுடன் மதன்குமாருக்கு, காய்கனிகள் விற்க ஒரு தள்ளு வண்டியினை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் வாங்கிக் கொடுத்துள்ளது. தனது தந்தையும் சேர்ந்து தொழிலை செய்ய உதவுவதாக மதன்குமார் கூறியுள்ளார். நம்மால் எதுவும் முடியாது என்று நினைத்த மதன்குமாருடைய மனதில் தற்போது தன்னம்பிகைக் வேரூன்றியுள்ளது. ■

தினம் ரூ. 75/– வரை இலாபம் பெற்று வருகிறார். இதனால் இவரது குடும்பமும் மகிழ்ச்சி அடைந்துள்ளது. தான் பெற்ற கடன் தொகையை திரும்பச் செலுத்தியவுடன் மதன்குமாருக்கு, காய்கனிகள் விற்க ஒரு தள்ளு வண்டியினை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் வாங்கிக் கொடுத்துள்ளது.

Published by S. CHINNAPPAN, on behalf of Mutram Society from Tamilnadu Corporation for Development of Women Ltd.,
100, Anna Salai, Guindy, Chennai - 600 032. (74,000 copies circulated) an printed by C. JABAMANI.
CANAAN PRESS PRIVATE LTD., 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor : S. CHINNAPPAN.

தமிழ்நாடு மகளிர்
நல மேம்பாட்டு நிறுவனம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

"முற்றம்" படியுங்கள், பாதுகாத்து வையுங்கள், சந்தாதாரர் ஆகுங்கள், முற்றத்தில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விளம்பரக் கட்டணம் (கலர்)

பின் அட்டை	ரூ. 25,000/-
அட்டை இரண்டாம் பக்கம்	ரூ. 20,000/-
அட்டை மூன்றாம் பக்கம்	ரூ. 20,000/-
உட் பக்கம்	ரூ. 20,000/-
அரைப் பக்கம்	ரூ. 10,000/-
கால் பக்கம்	ரூ. 5,000/-

(விளம்பரக் கட்டணத்தில் குழுக்களுக்கு மட்டும் சிறப்புச் சலுகை)

சந்தாக் கட்டணம்

1 ஆண்டு சந்தா	ரூ. 100/-
2 ஆண்டு சந்தா	ரூ. 150/-
3 ஆண்டு சந்தா	ரூ. 250/-
4 ஆண்டு சந்தா	ரூ. 300/-
ஆயுள் சந்தா	ரூ. 600/-
புரவலர் கட்டணம்	ரூ. 15,000/-

"முற்றம்" மகளிர் மாத இதழ் www.tamilnaduwomen.org/mutram

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை - 600 032

தொலைபேசி - 044 - 2230 1801, 4202 7635
4208 5806, நிகரி - 044 - 22352751
wdcmutram@yahoo.com, wdcmutram@gmail.com